**கவனிக்க.-** இவ் அதிவிசேட வர்த்தமானியின் சிங்கள, ஆங்கில பிரதிகள் தனித்தனியாக பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1942/20 - 2015 නොවැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.11.26

*1942/20 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

*பிரிவு 4(2) இன் கீழான பிரசுரிப்பு*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதன் பின்னர் "நிறுவகம்" என குறிப்பிடும்) வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 1995ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத் தேவைகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள சிறிய உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தினை (சிறிய உரிமங்களுக்கான SLFRS) நிறுவகம் கடைப்பிடித்துள்ளது. இந்த நியமங்கள் இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலத்தை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வருகின்றது.*

*பேரவையின் கட்டளைப்படி,*

*அருண அல்விஸ்,*
*செயலாளர்.*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,*
*30ஏ, மலலசேகர மாவத்தை,*
*கொழும்பு 7,*
*2015 நவம்பர் 26ந் திகதி.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அறிமுகம்**

உயர் மட்டத்திலான பொதுமக்கள் நாட்டத்தைக் கொண்ட அநேகமான உரிமங்களின் நிதிக்கூற்றுக்கள் பிரசித்தமாகவே கிடைப்பதுடன், பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பொதுமக்கள் அவற்றை பயன்படுத்துகின்றனர். எனவே, அத்தகைய உரிமங்கள் SLFRS களுக்கு இசைவாக நடந்துகொள்ள வேண்டுமென கேட்கப்பட்டுள்ளன. ஏனைய உரிமங்கள் அவற்றின் நிதிக்கூற்றுக்களை SME களுக்கான SLFRS களுக்கு இசைவாக தயாரிக்க முடியும். எனினும், SLFRS மற்றும் SME களுக்கான SLFRS ஆகியன சிறிய உரிமங்களுக்கு மிகவும் சிக்கலானவையாக உள்ளதுடன், இவற்றை கடைப்பிடித்தல் கீழ்வரும் காரணங்களுக்காக அந்த உரிமங்களுக்கு கிரய விளைவுத்திறன்

உடையவை அல்ல-

(a) குறைந்தளவு வருமானம், உரிமையாண்மை, சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள்;

(b) நிதிக்கூற்றுக்களின் கையாள்கை நாட்டதாரர்களுக்கு பொதுவாக மட்டுப்படுத்தப்பட்டு இருப்பதுடன், அவர்கள் மேலதிகத் தகவல்களை கேட்கவேண்டி ஏற்படலாம்.

சிறிய உரிமங்களுக்கான SLFRS ஒரு இலகுவான நிதி அறிக்கையிடல் நியமமாகும். இதனை சிறிய உரிமங்கள் கிரயவிளைவுத்திறனுடன் பயன்படுத்தமுடியும். இதை கீழ்வருவன தவிர்ந்த உரிமங்கள் பயன்படுத்தமுடியும்-

(a) அறிக்கையிடற் காலத்தில் ரூபா 100 மில்லியனிலும் அதிக வருமானமுடைய உரிமம்;

(b) முந்திய அறிக்கையிடற் கால முடிவில் ரூபா 50 மில்லியனிலும் அதிக உரிமையாண்மை கொண்ட உரிமம்;

(c) கம்பனிகள் சட்டத்தால் குழும நிதிக்கூற்றுக்களை தயாரிக்குமாறு கேட்கப்படும் உரிமம்;

(d) முதன்மை வியாபார நடவடிக்கைகளுள் ஒன்றாக நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்ற ரீதியில் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமம்.

இந்த நியமமானது, ஏனையவற்றுடன் கீழ்வரும் எளிமையாக்கங்களை உள்ளடக்குகின்றது-

(a) நிதிச் சாதனங்கள் தொடர்புபட்ட சிக்கலான தேவைப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன;

(b) சீர்மதிப்பு, பயன்பாட்டுப் பெறுமதி, ஆயுட்காலமுறை மதிப்பீடுகள் நீக்கப்பட்டுள்ளன;

(c) உதாரணமாக, அனேக குத்தகைகள் நேர்கோட்டு அடிப்படையில் மதிப்பிடல், தொக்குக் கிரயத்தில் மேந்தலைகளை உள்ளடக்காமை, சொத்துக்களின் கிரயத்தில் கடன்படுகை கிரயங்களை உள்ளடக்காமை, ஊழியர்கள் அறிக்கையிடற் திகதியில் நிறுவனத்தைவிட்டு விலகும்போது செலுத்தவேண்டிய தொகையில் ஓய்வுப் பணிக்கொடையை அளவிடல் மற்றும் லீவுக் கிரயத்தை லீவு எடுக்கப்படும் காலத்தில் ஏற்பிசைவு செய்தல் போன்று உருப்படிகளை அளவிடுதல் மேலும் எளிதாக்கப்பட்டு இருத்தல்;

(d) ஒப்பீட்டுத் தகவல்களில் மாற்றம் செய்யாது, கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் மற்றும் முன்னைய கால வழுக்களின் திருத்தங்களை அறிக்கையிடற் கால ஆரம்பத்தில் கைக்கொள் இலாபத்திற்கு செம்மையாக்கங்களாக முன்னிலைப்படுத்தல்;

(e) சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு இசைவாக மாறல் திகதியானது தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களின் முதலாவது அறிக்கையிடற் காலத்தின் தொடக்கமாக நிர்ணயித்ததன் மூலம் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறல் இலகுவாக்கப்பட்டுள்ளது;

(f) வெளிக்காட்டல்கள் தொடர்புபட்ட தேவைப்பாடுகள் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளன;

(g) முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று ஆகியவற்றிற்கு பதிலாக இலாப, நட்ட மற்றும் கைக்கொள்இலாபக் கூற்று முன்னிலைப்படுத்தப்படுதல்;

(h) சிறிய உரிமங்களால் மேற்கொள்ளப்படுதல் சாத்தியமற்ற செயற்பாடுகள் மற்றும் ஊடுசெயல்கள் தொடர்புபட்ட தேவைப்பாடுகள் உள்ளடக்கப்படாமை.

*சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கான முகவுரை*

1 *சிறிய உரிமங்களுக்கான SLFRS இன் நோக்கம், சிறிய உரிமங்கள் கிரய விளைவுத் திறனுடன் பயன்படுத்தக்கூடிய எளிமையான நிதி அறிக்கையிடல் நியமம் ஒன்றை வழங்குதலாகும்.*

2 *சிறிய உரிமங்களுக்கான SLFRS ஐ பயன்படுத்தக்கூடிய உரிமங்கள் நியமத்தின் அத்தியாயம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.*

3 *சிறிய உரிமங்களுக்கான SLFRS ஐ SLFRS களுக்கான அல்லது SME களுக்கான SLFRS ஆகியவற்றை தொடர்புபடுத்தாது வாசிக்க, கருத்துரைக்க மற்றும் பிரயோகிக்க முடியும்.*

4 *சிறிய உரிமங்களுக்கான SLFRS இன் கோட்பாடுகள் மற்றும் தொடர் தேடலுக்கான தத்துவங்கள் இந்நியமத்தின் அத்தியாயம் 2 இல் தரப்பட்டுள்ளன. SLFRS களுக்கான கோட்பாட்டு வேலைச் சட்டகம் மற்றும் SME களுக்கான SLFRSஇன் கோட்பாடுகள் மற்றும் தொடர் தேடலுக்கான தத்துவங்கள் சிறிய உரிமங்களுக்கான SLFRS இல் பிரயோகிக்கக்கூடியவை அல்ல.*

5 *சிறிய உரிமங்களுக்கான SLFRS இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் உரிமத்தின் அளவு, சிக்கல் மட்டம், வளங்களின் கிடைப்பனவு மற்றும் சிறிய உரிமங்களின் நிதிக் கூற்றுக்களை தயாரித்து முன்னிலைப்படுத்துவதில் கிரய விளைவுத்திறன்மீது அவற்றின் தாக்கம் ஆகியவற்றை கவனத்திற் கொண்டுள்ளது. எனவே, இந்நியமத்தில் குறிப்பிட்ட முன்னிலைப்படுத்தல், ஏற்பிசைவு மற்றும் அளவீட்டுத் தத்தவங்கள் SLFRS மற்றும் SME களுக்கான SLFRS இல் குறிப்பிடப்பட்டவற்றை விடவும் எளிமையானவையாகும்.*

**உள்ளடக்கம்**

***சிறிய உரிமங்களுக்கான SLFRS***

***சிறிய உரிமங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமம்***

*அத்தியாயம்*

*1* இந்த SLFRS இன் நோக்கெல்லை

*2* கோட்பாடுகள் மற்றும் தொடர்தேடற் தத்துவங்கள்

*3* நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

*4* கணக்கீட்டுக் கொள்கைகள், மதிப்பீடுகள் மற்றும் வழுக்கள்

*5* தொக்குகள்

*6* ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

*7* குத்தகைகள்

*8* ஊழியர் பயன்கள்

*9* வருமானம்

*10* ஏற்பாடுகளும் உறுமுரிமைகளும்

*11* கடன்படுகைக் கிரயம்

*12* அந்நிய நாணய மாற்றல்

*13* தொடர்புடைய தரப்பினர் பற்றிய வெளிக்காட்டல்கள்

*14* அரச கொடைகள்

*15* ஏனைய சொத்துக்களும் பரிப்புக்களும்

*16* அறிக்கையிடற் கால முடிவுக்குப் பிந்திய நிகழ்வுகள்

*17* சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாற்ற இடைக்கால ஏற்பாடுகள்

நிதிக்கூற்றுக்களின் விளக்க முன்னிலைப்படுத்தல்

SLFRS களுடனான ஒப்பீடு

SME களுக்கான SLFRS உடனான ஒப்பீடு

## அத்தியாயம் 1 – இந்த SLFRS இன் நோக்கெல்லை

### அறிமுகம்

1.1 சிறிய உரிமங்களுக்கான SLFRS எனும் இந்த நியமமானது இந்த அத்தியாயத்தில் கருத்துக் கூறியவாறு சிறிய உரிமங்களின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து முன்னிலைப்படுத்துவதில் பயன்படுத்தப்படலாம்.

### சிறிய உரிமம்

1.2 கீழ்வரும் ஏதாவது உரிமமொன்றாக அமையாத உரிமம் சிறிய உரிமமாகும்–

(a) அறிக்கையிடற் காலத்தில் ரூபா 100 மில்லியனுக்கு அதிகமான வருமானத்தை கொண்டுள்ள உரிமம்;

(b) முந்திய அறிக்கையிடற் காலத்தின் இறுதியில் ரூபா 50 மில்லியனுக்கு அதிகமாக உரிமையாண்மையை கொண்டுள்ள உரிமம்;

(c) கம்பனிகள் தொடர்புபட்ட சட்டத்தால் குழும நிதிக்கூற்றுக்களை தயாரிக்குமாறு கேட்கப்பட்டுள்ள கம்பனி;

(d) ஒரு முதன்மை வியாபார நடவடிக்கையாக நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் என்ற ரீதியில் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமம்.

## அத்தியாயம் 2 – கோட்பாடுகளும் தொடர்தேடற் தத்துவங்களும்

### நிதிக்கூற்றுக்களின் நோக்கம்

2.1 இந்த நியமத்திற்கு இசைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதன் நோக்கம், சிறிய உரிமம் ஒன்றின் நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துவோருக்கு அறிக்கையிடும் உரிமம் பற்றிய பயனுள்ள நிதித் தகவல்களை கிரய விளைவுத்திறனுடன் வழங்குவதாகும்.

### சொத்துக்கள், பரிப்புக்கள் மற்றும் உரிமையாண்மை

2.2 சொத்துக்கள், பரிப்புக்கள் மற்றும் உரிமையாண்மை கீழ்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன :

(a) சொத்து என்பது கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக உரிமம் கட்டுப்படுத்தும் தற்கால பொருளாதார வளமாகும்;

(b) பரிப்பு என்பது கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக பொருளாதார வளம் ஒன்றை மாற்றுவதற்கான உரிமத்தின் தற்கால கடப்பாடாகும்;

(c) உரிமையாண்மை என்பது உரிமத்தின் சகல பரிப்புக்களையும் கழித்த பின்னர் உரிமத்தின் சொத்துக்கள் மீதான ஈற்று நாட்டமாகும்.

### வருமானமும் செலவுகளும்

2.3 வருமானமும் செலவுகளும் கீழ்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன:

(a) வருமானம் என்பது அறிக்கையிடற் காலத்தில், உரிமையாண்மை முதலீட்டாளர் பங்களிப்பு தொடர்புபட்டவை தவிர்ந்த, உரிமையாண்மையில் அதிகரிப்பை விளைவிக்கும், சொத்துக்களின் உட்பாய்வுகளின் அல்லது அதிகரிப்புகளில் அல்லது பரிப்புக்களில் வீழ்ச்சி வடிவிலமைந்த பொருளியற் பயன்களில் அதிகரிப்பு ஆகும்;

(b) செலவுகள் என்பது, அறிக்கையிடற் காலத்தில், உரிமையாண்மை முதலீட்டாளரின் பகிர்ந்தளிப்பு தொடர்புபட்டவை தவிர்ந்த, உரிமையாண்மையில் வீழ்ச்சியை விளைவிக்கும், சொத்துக்களின் வெளிப்பாய்வு அல்லது அழிவடைதல் அல்லது பரிப்புக்களின் அதிகரிப்பு வடிவிலமைந்த பொருளியற் பயன்களில் வீழ்ச்சி ஆகும்.

**சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகளின் ஏற்பிசைவு**

*2.4* உருப்படியொன்றை ஏற்பிசைவு செய்வது (அதாவது நிதிக்கூற்றுகளில் கூட்டிணைத்தல்) அது சொத்து, பரிப்பு, வருமானம் அல்லது செலவின் வரைவிலக்கணத்தை திருப்தி செய்து இருப்பதுடன், கீழ்வரும் தேர்வுநிபந்தனைகளை நிறைவுசெய்யும்போது ஆகும்;

(a) உருப்படியுடன் சம்பந்தப்பட்ட எதிர்கால பொருளியற் பயன்கள் ஏதுமிருப்பின், அவை உரிமத்திற்கு அல்லது உரிமத்திலிருந்து பாய்தல் நிகழக்கூடியதாக (அதிக சாத்தியமானதாக) இருத்தல்;

(b) உருப்படி நம்பகமாக அளவிடப்படக்கூடிய கிரயத்தை அல்லது பெறுமதியை கொண்டிருத்தல்.

**அட்டுறு அடிப்படை**

*2.5* உரிமமொன்று அதன் நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டைப் பயன்படுத்தி தயாரிக்கும். அட்டுறு அடிப்படையின்கீழ் உருப்படிகள் சொத்துக்களாக, பரிப்புக்களாக, உரிமையாண்மையாக, வருமானமாக அல்லது செலவுகளாக ஏற்பிசைவு செய்யப்படுவது ,அவை அந்த உருப்படிகளுக்கான வரைவிலக்கணம் மற்றும் தேர்வு நிபந்தனைகளை நிறைவுசெய்யும்போது ஆகும்.

**அத்தியாயம் 3 – நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல்**

---

**நேர்மையான முன்னிலைப்படுத்தல்**(Fair presentation)

*3.1* உரிமமொன்றின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் நேர்மையாக முன்னிலைப்படுத்தப்படும்.

**சிறிய உரிமங்களுக்கான SLFRS உடன் ஒத்திசைதல்**

*3.2* இந்த நியமத்தின் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து, அதன் நிதிக்கூற்றுக்களை இந்த நியமத்திற்கு இசைவாக தயாரிக்கும் உரிமம் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் சிறிய உரிமங்களுக்கான SLFRS உடன் ஒத்திசைந்தமையை குறிப்பிடுதல் வேண்டும்.

**தொடர்ந்தியங்கும் தாபனம்**(Going concern)

*3.3* முகாமை, உரிமம் தொடர்ந்தியங்கும் தாபனமாக தொழிற்படக்கூடிய இயலுமையை மதிப்பிடும். உரிமம் தொடர்ந்தியங்கும் தாபனமாக அமைவது, முகாமை உரிமத்தை கலைப்பதற்கு அல்லது அதன் தொழிற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு எண்ணுகின்ற அல்லது அதை செய்வதைத் தவிர யதார்த்தமான மாற்று வழி இல்லாமை தவிர்ந்த சந்தர்ப்பத்திலேயே. தொடர்ந்தியங்கும் தாபன எடுகோள் பொருத்தமானதா என்பதை மதிப்பிடும்போது முகாமையானது அறிக்கையிடற் திகதியிலிருந்து குறைந்தபட்சம் 12 மாதங்கள் அல்லது அதற்குக் குறையாத எதிர்காலத்திற்கு கிடைக்கப்பெறும் சகல தகவல்களையும் கவனத்திற்கொள்ளும். முகாமை மதிப்பீட்டை மேற்கொள்ளும்போது உரிமம் தொடர்ந்தியங்கும் தாபனமாக தொழிற்படும் அதன் இயலுமைமீது கணிசமாக ஐயுறவை காட்டுகின்ற, நிகழ்வுகள் அல்லது புறநிலைகள் தொடர்பில் நிச்சயமற்ற தன்மைபற்றி தெரியவரின் முகாமை அந்த நிச்சயமற்ற தன்மையை வெளிக்காட்டும்.

**அறிக்கையிடற் கால மீடிறன் (Frequency)**

*3.4* உரிமமொன்று குறைந்தபட்சம் வருடந்தோறும் பூரணமான நிதிக்கூற்றுத் தொடையை முன்னிலைப்படுத்தும்.

**முன்னிலைப்படுத்தலின் கொள்கை மாறாமை**

*3.5* உரிமத்தின் தொழிற்பாடுகளின் தன்மையில் கணிசமான மாற்றம் இருப்பதாக அல்லது நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு வேறு முன்னிலைப்படுத்தல் அல்லது வகைப்படுத்தல் மிகவும் பொருத்தமானதாக இருக்குமென காட்டினாலன்றி, உரிமம் நிதிக்கூற்றுக்களில் உருப்படிகளை முன்னிலைப்படுத்துகின்ற அல்லது வகைப்படுத்துகின்ற முறையை காலத்திற்குக் காலம் மாறாத அடிப்படையில் மேற்கொள்ளும்.

**ஒப்பீட்டுத்தகவல்கள்**

3.6 இந்த நியமம் வேறுவிதமாக அனுமதித்தால் அல்லது தேவைப்படுத்தினாலன்றி, உரிமம் அதன் நடப்புக்கால நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் சகல தொகைகளுக்கும் முந்திய ஒப்பிடற்தகு காலம் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்களை வெளிக்காட்டும்.

**பொருண்மையும் ஒன்றுசேர்ப்பும்(Materiality and aggregation)**

3.7 தகவல் பொருண்மையானதாக அமைவது, அதன் தவிர்ப்பு அல்லது பிறழ்கூற்று தனியாகவோ அல்லது சேர்ந்தோ, பயன்படுத்துனர் நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் மேற்கொள்ளும் பொருளியற் தீர்மானங்களில் தாக்கம் செலுத்தும்போது ஆகும்.

3.8 இந்த நியமத்திலுள்ள தேவைப்பாடொன்றை கடைப்பிடிக்கும்போது அதனால் ஏற்படும் தாக்கம் பொருண்மையானதாக இல்லாதவிடத்து உரிமம் அதை கடைப்பிடிக்க வேண்டியதில்லை.

3.9 உரிமம் ஒத்த உருப்படிகளின் ஒவ்வொரு பொருண்மையான வகையை வெவ்வேறாக முன்னிலைப்படுத்தும். ஒவ்வாத தன்மையை அல்லது தொழிற்பாட்டை கொண்டுள்ள உருப்படிகளை, அவை பொருண்மையாக இல்லாதவிடத்து, வேறாக வெளிக்காட்டும்.

**நிதிக்கூற்றுக்களின் பூரணமான தொடை**

3.10 உரிமமொன்றின் நிதிக்கூற்றுக்களின் பூரணமான தொடை கீழ்வரும் எல்லாவற்றையும் உள்ளடக்கும்:

(a) சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் கூற்று;

(b) அறிக்கையிடும் காலத்திற்கான இலாப, நட்ட மற்றும் கைக்கொள் இலாப கூற்று;

(c) அறிக்கையிடும் காலத்திற்கான காசுப்பாய்வுக் கூற்று;

(d) கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களை கொண்டுள்ள குறிப்பு.

**நிதிக்கூற்றுக்களை இனங்காணல்**

3.11 உரிமம் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் (குறிப்புக்கள் அடங்கலாக) தெளிவாக இனங்காண்பதுடன், அதே ஆவணத்திலுள்ள ஏனைய தகவல்களிலிருந்து வேறுபடுத்திக்காட்டும். அத்துடன், உரிமம் கீழ்வரும் தகவல்களை முக்கியப்படுத்திக் காட்டுவதுடன், முன்னிலைப்படுத்தும் தகவல்களை விளங்கிக்கொள்வதற்கு அவசியமெனில் அவற்றை மீளவும் குறிப்பிடும்:

(a) அறிக்கையிடும் உரிமத்தின் பெயரும் முன்னைய அறிக்கையிடற் காலத்தின் பின்னர் பெயரில் ஏதாவது மாற்றம் இருப்பின் அந்தப் பெயரும்;

(b) அறிக்கையிடற் கால முடிவுத் திகதியும், நிதிக்கூற்றுக்கள் அடக்கும் காலமும்;

(c) நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தப்படும் நாணயம்;

(d) நிதிக்கூற்றுக்களில் தொகைகள் மடங்குகளாக முன்னிலைப்படுத்தப்படின், அந்தநாணய அலகுகளின் மடங்குகள் (ரூபா 000 கள் போன்றவை).

3.12 உரிமம் கீழ்வருவனவற்றை அதன் குறிப்புக்களில் வெளிக்காட்டும்:

(a) உரிமத்தின் சட்ட வடிவம், கூட்டிணைக்கப்பட்ட நாடு, அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி, வியாபாரம் நடாத்தப்படும் பிரதான இடம்; அத்துடன்

(b) உரிமத்தின் தொழிற்பாடுகளின் தன்மை பற்றிய விபரமும், பிரதான வியாபார செயற்பாடுகளும்.

சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் கூற்று

**அறிமுகம்**

3.13 சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் கூற்று அறிக்கையிடற் திகதியிலுள்ள உரிமத்தின் சொத்துக்கள், பரிப்புக்கள் மற்றும் உரிமையாண்மையை முன்னிலைப்படுத்தும்.

**நடைமுறை / நடைமுறையல்லா வேறுபாடு**

3.14 உரிமம் அதன் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் கூற்றில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களையும், நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பரிப்புக்களையும் வெவ்வேறான வகைப்படுத்தல்களாகக் காட்டும்.

3.15 உரிமம் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் சொத்தொன்றை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தும் :

(a) உரிமம் அந்தச் சொத்தை உரிமத்தின் வழமையான தொழிற்பாட்டுச் சுற்றின் போது தேறுவதற்கு எதிர்பார்த்தால் அல்லது விற்பதற்கு அல்லது நுகருவதற்கு எண்ணினால்;

(b) உரிமம் சொத்தை அடிப்படையில் வியாபார நோக்கத்துடன் வைத்தருப்பின்;

(c) உரிமம் அறிக்கையிடற் திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் அதை தேறுவதற்கு எதிர்பார்ப்பின்;

(d) சொத்தானது, அறிக்கையிடற் திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் பரிப்பொன்றிற்கு பரிமாற்றாக கொடுப்பதற்கு அல்லது அதை தீர்ப்பதற்கு தடைசெய்யப்பட்டிராத காசு அல்லது காசுச்சமானமாக இருப்பின்.

3.16 உரிமம் ஏனைய சகல சொத்துக்களையும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தும். உரிமத்தின் வழமையான தொழிற்பாட்டுச் சுற்றுக் காலம் தெளிவாக இனங்காணப்பட முடியாதவிடத்து, காலம் பன்னிரண்டு மாதங்களாகக் கொள்ளப்படும்.

3.17 உரிமம் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் பரிப்பை நடைமுறைப் பரிப்பாக வகைப்படுத்தும்:

(a) அந்தப் பரிப்பை உரிமத்தின் வழமையான தொழிற்பாட்டுச் சுற்றின்போது தீர்ப்பதற்கு எதிர்பார்த்தால்;
(b) அந்தப் பரிப்பை அறிக்கையிடற் திகதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்ப்பதற்கு எதிர்பார்ப்பின்;
(c) பரிப்பை தீர்ப்பதை அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் குறைந்தபட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு பிற்போடக்கூடிய நிபந்தனையற்ற உரிமையை உரிமம் கொண்டிராது இருத்தல்.

3.18 உரிமம் ஏனைய சகல பரிப்புக்களையும் நடைமுறையற்றவையாக வகைப்படுத்தும்.

**சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் கூற்றில் அல்லது குறிப்புக்களில் காட்டப்படவேண்டிய தகவல்கள்**

3.19 உரிமமொன்று சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் அல்லது குறிப்புகளில் தரப்படும் வரிசை உருப்படிகளின் கீழ்வரும் உப வகுப்பாக்கங்களை காட்டும்

(a) உரிமத்திற்கு பொருத்தமானவாறு, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உப வகுப்பாக்கம்;

(b) வியாபார மற்றும் ஏனைய வருமதிகளை தொடர்புடைய தரப்பினரிடமிருந்தான வருமதிகள், ஏனைய தரப்பினரிடமிருந்தான வருமதிகள் மற்றும் இன்னும் விலைப்பட்டியல் அனுப்பப்படாத அட்டுறு வருமானமத்திலிருந்தான வருமதிகள் ஆகிய தொகைகளை வெவ்வேறாகக் காட்டுதல்;

(c) கீழ்வரும் தொக்குகளின் தொகைகளை வெவ்வேறாகக் காட்டுதல்:

(i) வழமையான வியாபார செயற்பாட்டின் அங்கமாக விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை (உதா. சில்லறை வியாபாரிகள் வைத்திருக்கும் சொத்துக்களும், உற்பத்தியாளரிடமுள்ள பூர்த்தியடைந்த பொருட்களும்);

(ii) அத்தகைய விற்பனைகளுக்காக உற்பத்திச் செயன்முறையிலுள்ளவை (உதா. உற்பத்தியாளரின் புத்துருவாகும் வேலைகள்);

(iii) உற்பத்திச் செயன்முறை அல்லது சேவை வழங்குதலில் நுகருவதற்காக வைத்திருக்கப்படும் மூலப்பொருட்கள் அல்லது வழங்கல்கள் வடிவிலுள்ள தொக்குகள் (உதா. மூலப்பொருட்கள்)

(d) வியாபார வழங்குனர்களுக்கு செலுத்தவேண்டியவை, உறவுமுறை தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை, பிற்போடப்பட்ட வருமானம், அட்டுறுக்கள் ஆகியவற்றை வெவ்வேறாகக் காட்டும்வகையில் வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்;

(e) ஊழியர் பயன் ஏற்பாடுகளை ஏனைய ஏற்பாடுகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வகையில் ஏற்பாடுகள்;

(f) குறிப்பிடு மூலதனம், கைக்கொள் இலாபம் போன்று உரிமையாண்மையின் வகைகள்.

3.20 பங்கு மூலதனத்தை கொண்டுள்ள உரிமமொன்று சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களின் கூற்றிலோ அல்லது குறிப்புக்களிலோ கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) ஒவ்வொரு பங்கு மூலதன வகுப்பிற்கும்:

(i) வழங்கப்பட்டு முற்றிலும் செலுத்தப்பட்ட மற்றும் வழங்கப்பட்டு முற்றிலும் செலுத்தப்படாத பங்குகளின் எண்ணிக்கை;

(ii) காலத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் நிலுவையிலிருந்த பங்குகளின் எண்ணிக்கையின் கணக்கிணக்கம்;

(iii) பங்கிலாபப் பகிர்வு மற்றும் மூலதன மீள்செலுத்துகை ஆகியவற்றின்மீது வரையறைகள் அடங்கலாக ஒவ்வொரு வகை பங்குகளுடனும் இணைந்த உரிமைகள், முன்னுரிமைகள் மற்றும் வரையறைகள்;

(iv) கட்டுறுப்புக்கள் மற்றும் தொகைகள் உட்பட பங்குகளின் விற்பனைக்கான தேர்வுரிமை /ஒப்பந்தங்களின்கீழ் வழங்குவதற்கு ஒதுக்கிய பங்குகள்.

(b) உரிமையாண்மையில் அடங்கியுள்ள ஒவ்வொரு ஒதுக்கத்தினதும் விபரம்.

**இலாப நட்ட மற்றும் கைக்கொள் வருமானக் கூற்று**

3.21 உரிமம் அறிக்கையிடற் காலத்தின் இலாப, நட்டத்தை தீர்மானித்தலில் ஏற்பிசைவு செய்யப்பட்ட வருமான மற்றும் செலவு உருப்படிகள், அறிக்கையிடற் கால ஆரம்பத்தில் கைக்கொள் இலாபம், முன்னைய கால வழுக்களின் திருத்தங்கள், முன்னைய காலம் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்களின் தாக்கங்கள், பங்கிலாபம், கைக்கொள் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வேறு உருப்படிகள், அறிக்கையிடற் கால இறுதியில் கைக்கொள் இலாபம் ஆகியவற்றை அறிக்கையிடற் காலத்திற்கான இலாப, நட்ட மற்றும் கைக்கொள் இலாபக் கூற்றில் முன்னிலைப்படுத்தும்.

3.22 உரிமம் தொழிற்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட செலவுகளின் பகுப்பை முன்னிலைப்படுத்தும். தொழிற்பாடுகள் அடிப்படையில் ஒன்றுசேர்க்கும் செலவுகளுக்கு உதாரணங்கள், விற்பனைக் கிரயம், விநியோகக் கிரயம், நிருவாகக் கிரயம் ஆகியன. உரிமம் எந்தவொரு வருமான அல்லது செலவின உருப்படியையும் நிதிக்கூற்றுக்களில் "அசாதாரண உருப்படிகளாக" முன்னிலைப்படுத்த அல்லது விபரிக்க மாட்டாது.

**காசுப்பாய்வுக் கூற்று (Statement of Cash flows)**

**காசுச் சமானங்கள்(Cash equivalents)**

3.23 காசுச் சமானங்களாவன குறுகிய கால காசுக் கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்காக வைத்திருக்கும் குறுகிய கால, உயர் திரவத்தன்மையுடைய முதலீடுகளாகும். எனவே, முதலீடு காசுச்சமானமாக தகைமை பெறுவது, அதன் கொள்வனவுத் திகதியிலிருந்து, மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான குறுகிய கால முதிர்வு காலத்தை கொண்டுள்ளபோது மாத்திரமே. வங்கி மேலதிகப் பற்றுக்கள் வழக்கமாக கடன்படுகை போன்ற நிதியளிப்புச் செயற்பாடாகக் கொள்ளப்படும்.

**காசுப்பாய்வுக் கூற்றில் முன்னிலைப்படுத்த வேண்டிய தகவல்கள்**

3.24 உரிமம் அறிக்கையிடற் காலத்தின் காசுப்பாய்வுகளை தொழிற்பாட்டுச் செயற்பாடுகள், முதலீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நிதியளிப்புச் செயற்பாடுகள் மூலமான காசுப் பாய்வுகளாக வகைப்படுத்திக் காட்டும் காசுப்பாய்வுக் கூற்றை முன்னிலைப்படுத்தும்.

**தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் / நடவடிக்கைகள்**

3.25 தொழிற்பாட்டு நடவடிக்கைகள் உரிமத்தின் பிரதான வருமானம் ஈட்டும் செயற்பாடாகும். எனவே, தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்வுகள் பொதுவாக இலாப, நட்டத்தை தீர்மானித்தலில் உள்வாங்கப்படும் ஊடுசெயல்கள், ஏனைய நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளின் விளைவாக ஏற்படுபவையாகும். ஒரு உற்பத்தி செய்யும் உரிமம் பொறித்தொகுதி ஒன்றை விற்பனை செய்வது போன்ற சில ஊடுசெயல்கள் இலாப, நட்டத்தில் உட்படுத்தப்படும் நயம் அல்லது இழப்பிற்கு வழியமைக்கக்கூடும். எனினும், அத்தகைய ஊடுசெயல்களால் விளையும் காசுப்பாய்வுகள் முதலீட்டுச் செயற்பாடுகளில் இருந்தான காசுப்பாய்வுகளாகும்.

**முதலீட்டுச் செயற்பாடுகள்**

*3.26* முதலீட்டுச் செயற்பாடுகளாவன, காசுச் சமானங்களில் உட்படுத்தப்படாத, நீண்டகால சொத்துக்கள் மற்றும் முதலீடுகளின் கொள்வனவு மற்றும் முதலீடுகளாகும்.

**நிதியளிப்புச் செயற்பாடுகள்**

*3.27* நிதியளிப்புச் செயற்பாடுகள், உரிமத்தின் பங்களிக்கப்பட்ட உரிமையாண்மை மற்றும் கடன்களின் அளவு மற்றும் கட்டமைப்பு மாற்றங்களினால் விளைவதாகும்.

**தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்வுகளை அறிக்கையிடுதல்**

*3.28* உரிமம் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான அதன் காசுப்பாய்வுகளை நேரில் முறையை பயன்படுத்தி தயாரித்து முன்னிலைப்படுத்தும். இங்கு இலாப நட்டமானது காசு சாராத ஊடுசெயல்களின் தாக்கங்கள், கடந்தகால அல்லது எதிர்கால காசுப் பெறுவனவுகள் அல்லது கொடுப்பனவுகளுக்கான பிற்போடல்கள் அல்லது அட்டுறுக்கள், முதலீட்டு அல்லது நிதியளிப்பு காசுப்பாய்வுகள் தொடர்புபட்ட வருமானத்தின் அல்லது செலவின உருப்படிகள் ஆகியவற்றிற்காக செம்மையாக்கம் செய்யப்படும்.

*3.29* தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர காசுப்பாய்வு இலாபம் அல்லது நட்டத்தை கீழ்வரும் தாக்கங்களுக்காக செம்மையாக்கம் செய்வதன்மூலம் கணித்தறியப்படும்:

(a) காலத்தின்போது தொக்குகள் மற்றும் தொழிற்பாட்டு வருமதிகளில் அல்லது சென்மதிகளில் மாற்றங்களுக்காக :

(b) தேய்மானம், ஏற்பாடுகள், இன்னும் காசுமூலம் பெறப்படாத (அல்லது செலுத்தப் படாத) அட்டுறு வருமானம் (அல்லது செலவினம்) மற்றும் தேறப்படாத அந்நிய நாணய இலாபம் மற்றும் நட்டங்கள் போன்ற காசுசாராத உருப்படிகளுக்காக;

(c) முதலீட்டு அல்லது நிதியளிப்பு நடவடிக்கைகள் தொடர்புபட்ட காசுத் தாக்கங்கள் உடைய ஏனைய சகல உருப்படிகளுக்குமாக.

**குறிப்புக்கள் :**

*3.30* குறிப்புக்கள;

(a) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட அடிப்படை பற்றிய தகவல்கள் மற்றும் பயன்படுத்திய குறிப்பான கணக்கீட்டுக் கொள்கைகளை முன்னிலைப்படுத்தும் ;

(b) இந் நியமம் தேவைப்படுத்துகின்ற, நிதிக்கூற்றுக்களில் வேறெங்கும் முன்னிலைப்படுத்தப்படாத தகவல்களை வெளிக்காட்டும்;

(c) நிதிக்கூற்றுக்களிலுள்ள உருப்படிகளை விளங்கிக்கொள்வதுடன் தொடர்புபட்ட, ஆனால் நிதிக்கூற்றுக்களில் வேறெங்கும் காட்டப்படாத தகவல்களை வழங்கும்.

*3.31* உரிமம் நடைமுறைச் சாத்தியமான வரையில் குறிப்புக்களை ஒரு ஒழுங்குமுறையில் முன்னிலைப்படுத்தும். அத்துடன் உரிமம் குறிப்புக்களிலுள்ள ஒவ்வொரு தொடர்புபட்ட தகவல்களை நிதிக்கூற்றுக்களிலுள்ள உரிய உருப்படிகளுடன் தொடர்புபடுத்திக் காட்டும்.

*3.32* குறிப்புக்களை ஒழுங்குமுறையில் முன்னிலைப்படுத்துவதற்கு ஒரு உதாரணம் வருமாறு:

(a) நிதிக்கூற்றுக்கள் சிறிய உரிமங்களுக்கான *SLFRS* இற்கு இசைவாக தயாரிக்கப்பட்டுள்ளமையை தெரிவிக்கும் ஒரு கூற்று;

(b) பிரயோகிக்கப்பட்டுள்ள முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு ;

(c) நிதிக்கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்ட உருப்படிகளைப்பற்றி விளக்கும் தகவல்களை நிதிக்கூற்றுக்கள் முன்னிலைப்படுத்திய மற்றும் ஒவ்வொரு வரிசை உருப்படிகளின் ஒழுங்கில்;

(d) வேறு ஏதாவது வெளிக்காட்டல்கள் (இருப்பின்).

**கணக்கீட்டுக் கொள்கைகளின் வெளிக்காட்டல்கள்**

*3.33* உரிமம் கணிசமான கணக்கீட்டு கொள்கைகளின் தொகுப்பில் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) நிதிக்கூற்றுக்களை தயாரித்தலில் பயன்படுத்திய அளவீட்டு அடிப்படை அல்லது அடிப்படைகள் (உதா: வரலாற்றுக் கிரய அடிப்படை) ; அத்துடன்

(b) நிதிக்கூற்றுக்களை விளங்குவதற்கு தேவையான (தொடர்புபட்ட), பயன்படுத்திய ஏனைய கணக்கீட்டுக் கொள்கைகள்.

## அத்தியாயம் 4 – கணக்கீட்டுக் கொள்கைகள், மதிப்பீடுகள் மற்றும் வழுக்கள்

### கணக்கீட்டுக் கொள்கைகளின் தெரிவும், பிரயோகமும்

4.1 கணக்கீட்டுக் கொள்கைகள் எனப்படுவது, உரிமமொன்று நிதிக்கூற்றுக்களை தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கு பிரயோகிக்கும் குறிப்பிட்ட தத்துவங்கள், அடிப்படைகள், வழக்கங்கள், நியதிகள் மற்றும் நடைமுறைகள் ஆகும். உரிமம் ஒத்த ஊடுசெயல்கள், பிற நிகழ்வுகள் மற்றும் புறநிலைகளுக்கு கொள்கை மாறாத அடிப்படையில் அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும்.

### கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

4.2 உரிமம் அதன் கணக்கீட்டுக் கொள்கைகளை மாற்றுவது, அந்த மாற்றம் உரிமத்தின் நிதிநிலைமை அல்லது நிதிச் சாதனைமீதுஊடுசெயல்கள், பிறநிகழ்வுகள் அல்லது புற நிலைகளின் தாக்கங்கள் பற்றிய நம்பகரமான, மிகுந்த தொடர்புடைய தகவல்களை நிதிக்கூற்றுக்கள் வழங்கும்போது மாத்திரமேயாகும். எனவே, கணக்கீட்டுக் கொள்கை மாற்றங்கள் மிகவும் அபூர்வமானதாகும்.

4.3 முன்னர் நிகழ்ந்திராத அல்லது பொருண்மையானதாக இருந்திராத ஊடுசெயல்கள், பிற நிகழ்வுகள் அல்லது புறநிலைகளுக்கு புதிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகம், கணக்கீட்டுக் கொள்கை மாற்றமாக கொள்ளப்பட மாட்டாது.

### கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்களை பிரயோகித்தல்

4.4 உரிமம் முன்னைய காலங்கள் தொடர்பான கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்களின் தாக்கத்தை அதன் இலாப, நட்ட மற்றும் கைக்கொள்இலாபக் கூற்றில் அறிக்கையிடற் காலத்தின் இலாபத்தை கணித்தலில் ஏற்பிசைவு செய்யப்பட்ட உருப்படியாக அல்லாது முன்கொண்டுவரப்பட்ட கைக்கொள் இலாபத்தை தீர்மானித்தலில் செம்மையாக்கமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

### கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள்

4.5 கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றம் எனப்படுவது, சொத்தொன்றின் அல்லது பரிப்பொன்றின் முன்கொணரற் தொகையில் அல்லது சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுடன் தொடர்புபட்ட நிகழ்கால நிலை மற்றும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால பயன்கள் அல்லது கடப்பாடுகளின் மதிப்பீட்டின் விளைவாக சொத்தின் காலாந்தர நுகர்வில் மாற்றமாகும். கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் புதிய தகவல்களின் அல்லது புதிய மாற்றங்களின் காரணமாக ஏற்படுவதுடன், அதன்படி அவை வழுக்களின் திருத்தம் அல்ல. கணக்கீட்டு கொள்கை மாற்றத்தை கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றத்திலிருந்து வேறுபடுத்துதல் கடினமானவிடத்து அந்த மாற்றம் கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றமாகக் கொள்ளப்படும்.

4.6 கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்களுக்கு உதாரணம் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) சொத்தின் பயன்பாட்டு நுகர்வுப் பாங்கின் திருத்திய மதிப்பீட்டை பிரதிபலிக்கும் வகையில் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் தேய்மான முறையை குறைந்துசெல்லும் மீதி முறையிலிருந்து நேர்கோட்டு முறைக்கு மாற்றுதல்;

(b) ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் பயன்தரும் ஆயுட்கால மீள்மதிப்பீடு.

4.7 உரிமம் கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றத்தின் தாக்கததை அதன்பின்னர் நடைமுறைக்கு வரும் வகையில் கீழ்வருமாறு அதன் இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்யும்:

(a) மாற்றமானது மாறிய காலத்தில் மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்துமாகில், அந்த மாற்றம் ஏற்பட்ட காலத்தின் இலாப, நட்டத்தில்; அல்லது

(b) மாற்றம் நடப்புக் காலம் மற்றும் எதிர்காலம் இரண்டையும் பாதிக்குமாகில், நடப்பு மற்றும் எதிர்கால இலாப, நட்டத்தில்.

4.8 கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றமொன்று சொத்துக்கள் அல்லது பரிப்புக்களில் மாற்றத்தை விளைவிக்குமேயாகில், உரிமம் மாற்றம் நிகழ்ந்த காலத்தில் தொடர்புபட்ட சொத்தின் அல்லது பரிப்பின் முன்கொணரற் தொகையை செம்மையாக்குவதன் மூலம் மாற்றத்தை ஏற்பிசைவு செய்யும்.

**முன்னைய கால வழுக்களின் திருத்தம்**

4.9 முன்னைய கால வழுக்கள் எனப்படுவது,

(a) காலங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்டபோது கிடைத்திருந்த ; அத்துடன்

(b) அந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்து முன்னிலைப்படுத்துவதில் பெற்று கணக்கில் கொண்டிருக்க வேண்டுமென நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய நம்பகமான தகவல்களை பயன்படுத்தத் தவறியதன் அல்லது தவறாக பயன்படுத்தியதன் காரணமாக உரிமத்தின் ஒன்று அல்லது அதிகமான முன்னைய காலங்களின் நிதிக் கூற்றுக்களில் தவறுகைகள் அல்லது பிறழ்கூற்றுக்களாகும்.

4.10 அத்தகைய வழுக்கள் கணிதத் தவறுகள், கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிப்பதில் தவறுகள், உண்மைகளை கவனிக்காதுவிடுதல் அல்லது அவற்றை தவறாக விளங்கிக் கொள்ளுதல், மோசடி ஆகியவற்றை உள்ளடக்கும்.

4.11 உரிமம் முன்னையகால வழுக்களின் தாக்கத்தை அறிக்கையிடற்கால இலாப, நட்டத்தை தீர்மானிப்பதில் ஏற்பிசைவு செய்யப்படாத ஆனால் முன்கொணரப்பட்ட கைக்கொள் இலாபத்தை தீர்மானிப்பதில் ஏற்பிசைவு செய்யப்பட்ட உருப்படியாக, இலாப, நட்ட மற்றும் கைக்கொள் இலாபக் கூற்றில், முன்னிலைப்படுத்தும்.

**வெளிக்காட்டல்கள்**

**கணக்கீட்டுக் கொள்கை மாற்றத்தின் வெளிக்காட்டல்**

4.12 கணக்கீட்டுக் கொள்கை மாற்றம் நடப்புக் காலத்தில் அல்லது முன்னைய காலத்தில் தாக்கத்தினை கொண்டிருப்பின், உரிமம் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) கணக்கீட்டுக் கொள்கையை மாற்றத்தின் தன்மை;

(b) புதிய கணக்கீட்டுக் கொள்கையை பிரயோகித்தல் நம்பகரமானதும் அதிக தொடர்புடையதுமான தகவல்களை வழங்குவது ஏன் என்பதற்கான காரணங்கள்;

(c) நடைமுறைச் சாத்தியமானவரை இலாப, நட்டத்திற்கு,

(i) நடப்புக் காலத்தில்; மற்றும்

(ii) நடப்புக் காலத்திற்கு முந்திய காலங்களுக்காக மொத்தமாக

செம்மையாக்கம் செய்யப்படவேண்டிய தொகை;

(d) மேலே (c) யில் வெளிக்காட்டவேண்டிய தொகையை தீர்மானித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதெனில் அதுபற்றிய விளக்கம்.

பின்னைய காலங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த வெளிக்காட்டல்களை திரும்பவும் மேற்கொள்ள வேண்டியதில்லை.

**மதிப்பீட்டில் மாற்றததை வெளிக்காட்டல்**

4.13 உரிமம், கணக்கீட்டு மதிப்பீட்டில் மாற்றமெதுவும் இருப்பின் அதன் தன்மை மற்றும் நடப்புக் காலத்தில் சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள்மீது அந்த மாற்றத்தின் தாக்கம் ஆகியவற்றை வெளிக்காட்டும்.

**முன்னைய கால வழுக்களின் வெளிக்காட்டல்**

4.14 உரிமம் முன்னைய கால வழுக்கள் தொடர்பில் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) முன்னைய கால வழுவின் தன்மை;

(b) கைக்கொள் இலாபத்தின் திருத்தத் தொகை;

(c) மேலே(b) யில் வெளிக்காட்டவேண்டிய தொகையை தீர்மானித்தல் நடைமுறைச் சாத்திமற்றதெனில், அதுபற்றிய விளக்கம்.

பின்னைய காலங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த வெளிக்காட்டல்களை திரும்பவும் மேற்கொள்ள வேண்டியதில்லை.

### அத்தியாயம் 5 – தொக்குகள்

**நோக்கெல்லை**

5.1 தொக்குகள் கீழ்வருமாறு அமைந்த சொத்துக்களாகும்:

(a) வழக்கமான வியாபார செயற்பாடுகளின்போது விற்பனைக்காக வைத்திருப்பவை;

(b) அத்தகைய விற்பனைக்காக உற்பத்திச் செயன்முறையில் உள்ளவை;

(c) உற்பத்திச் செயன்முறையில் அல்லது சேவை வழங்கலில் நுகரப்படவுள்ள பொருட்களின் அல்லது வழங்கல்களின் வடிவிலமைந்தவை.

**தொக்குகளின் அளவீடு(Measurement of inventories)**

5.2 உரிமம் தொக்குகளை, கிரயம் மற்றும் மதிப்பிட்ட விற்பனை விலையிலிருந்து பூர்த்தி செய்வதற்கு தேவைப்படும் செலவை கழிக்க வரும் தொகை இரண்டிலும் குறைந்த தொகையில் அளவிடும். தொக்கின் முன்கொணரற் பெறுமதியில் வீழ்ச்சியானது இலாப, நட்டத்தில் தொக்குகளின் சேத இழப்பாக ஏற்பிசைவு செய்யப்படும்.

**தொக்குகளின் கிரயம்**

5.3 உரிமம் தொக்குகளின் கிரயத்தில் கொள்வனவுக் கிரயம், உருமாற்றுக் கிரயம் மற்றும் தொக்கை தற்போதைய நிலைக்கும் அமைவிடத்திற்கும் கொண்டுவருதலில் இறுக்கிய ஏனைய கிரயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

**கொள்வனவுக் கிரயம்**

5.4 தொக்குகளின் கொள்வனவுக் கிரயமானது முடிவுற்ற பொருட்கள், மூலப்பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதுடன் நேரடியாக தொடர்புபட்ட கொள்வனவு விலை, இறக்குமதித் தீர்வைகளும் பிற வரிகளும் (வரி அதிகார அமைப்புக்களிலிருந்து உரிமத்தால் பின்னர் மீளப்பெறக்கூடியவை தவிர்ந்த), பொருட்காவுகை, கையாள்கை மற்றும் பிற கிரயங்களை கொண்டிருக்கும். கொள்வனவுக் கிரயத்தை தீர்மானித்தலில் வியாபாரக் கழிவுகள், விடுதொகைகள் மற்றும் பிற ஒத்த உருப்படிகள் கழிக்கப்படும்.

**உருமாற்றுக் கிரயம் (Cost of conversion)**

5.5 தொக்குகளின் உருமாற்றுக் கிரயமானது நேர் பொருள், நேர் கூலி போன்ற உற்பத்தி அலகுகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட கிரயங்களை மாத்திரம் உள்ளடக்கும்.

**இணைந்த உற்பத்திப் பொருட்களும் உப உற்பத்திப் பொருட்களும்**

5.6 ஒரு உற்பத்திச் செயன்முறை ஒரே நேரத்தில் ஒன்றிற்குமேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யக்கூடும். இத்தகைய நிலை இணைந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்போது அல்லது பிரதான பொருளும் உபபொருளும் உற்பத்தி செய்யப்படும்போது ஏற்படும். ஒவ்வொரு பொருளினதும் மூலப்பொருட் கிரயமோ அல்லது உருமாற்றுக் கிரயமோ வெவ்வேறாக இனங்காணப்பட முடியாதவிடத்து, உரிமம் அந்தக் கிரயங்களை உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கிடையில் நியாயமான, கொள்கைமாறாத அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும். இவ்வாறு ஒதுக்கீடு செய்வது உதாரணமாக பொருட்கள் வேறாக இனங்காணக்கூடியதாக இருக்குமிடத்து உற்பத்திக் கட்டத்தின்போது அல்லது உற்பத்தி முடிவில் அவற்றின் ஒப்பீட்டு விற்பனைப் பெறுமதிகளின் அடிப்படையில் செய்யப்படும். உப பொருளின் கிரயம் பொருண்மையற்றதெனில், உரிமம் அதன் கிரயத்தை அதன் விற்பனை விலையிலிருந்து அதனை பூரணப்படுத்தி விற்பனை செய்ய ஏற்படும் கிரயம் கழிக்கவரும் தொகையில் அளவிடுவதுடன், இந்தத் தொகையை பிரதான பொருளின் உற்பத்திக் கிரயத்தை அளவிடுவதற்கு மொத்தக் கிரயத்திலிருந்து கழிக்கும்.

**தொக்குகளில் விலக்கப்படும் கிரயங்கள்**

5.7 தொக்குகளின் கிரயத்திலிருந்து விலக்கப்பட்டு இறுக்கப்பட்ட காலத்திலேயே செலவாக ஏற்பிசைவு செய்யப்படும் கிரயங்களுக்கு உதாரணம்:

(a) விரயமாக்கப்பட்ட பொருட்கள், கூலி அல்லது வேறு உற்பத்திக் கிரயங்களின் அசாதாரண இழப்புத் தொகைகள்;

(b) உற்பத்திக் கட்டங்களுக்கு இடையில் களஞ்சியப்படுத்தல் தேவைப்பட்டாலன்றி, களஞ்சியப்படுத்தற் கிரயம்;

(c) உற்பத்தி மற்றும் நிருவாக மேந்தலைகள்;

(d) விற்பனை செய்தற் கிரயம்;

(e) வட்டிக் கிரயம்;

(f) அந்நிய நாணயமாற்று வித்தியாசங்கள்.

**சேவை வழங்குனர் ஒருவரின் தொக்குகளின் கிரயம்**

5.8 தொக்குகளைக் கொண்டுள்ள சேவை வழங்குனரொருவர் அத்தகைய தொக்குகளை உற்பத்திக் கிரயத்தில் அளவிடுவார். அடிப்படையில் உற்பத்திக் கிரயம் மேற்பார்வை ஆளணி உட்பட சேவை வழங்குவதுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட ஆளணியின் கிரயத்தை கொண்டிருக்கும். விற்பனை மற்றும் பொதுவான நிருவாக ஆளணி தொடர்புபட்ட கிரயம் தொக்குக் கிரயத்தில் உட்படுத்தப்படாததுடன், அவை இறுக்கப்பட்ட காலங்களிலேயே செலவாக ஏற்பிசைவு செய்யப்படும். சேவை வழங்குனரின் தொக்குக் கிரயம் இலாப எல்லை அல்லது தொடர்புபடாத மேந்தலைகளை உட்படுத்துவதில்லை.

**நியம கிரயமிடல், சில்லறை விற்பனை முறை மற்றும் மிகக்கிட்டிய கால கொள்வனவு விலை போன்ற கிரயத்தை அளவிடுவதற்கான நுட்பங்கள்**

5.9 உரிமம் பெறப்படும் பெறுபேறு உண்மைக் கிரயத்திற்கு கிட்டியதாக இருப்பின், நியமக் கிரயமிடல் முறை, சில்லறை விற்பனை விலையிலிருந்து இலாப எல்லையை கழித்தல் அல்லது மிக அண்மைக்கால கொள்வனவு விலை போன்ற நுட்பங்களை தொக்குகளின் கிரயத்தை அளவிட பயன்படுத்தக்கூடும். நியமக் கிரயமிடலானது பொருட்கள் மற்றும் வழங்கல்கள், ஊழியர் வினைத்திறன் மற்றும் இயல்வலுப் பயன்பாட்டின் வழமையான மட்டங்களை கணக்கிற் கொள்ளும். இவை கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன், அவசியமான இடத்து நடப்புப் புறநிலைகளின் அடிப்படையில் திருத்தப்படும்.

**கிரயத்தை தீர்மானிக்கும் முறைகள்**

5.10 சாதாரணமாக பரிமாற்றம் செய்யப்பட முடியாத தொக்கு உருப்படிகள் மற்றும் உற்பத்தி செய்து குறிப்பிட்ட செயற்திட்டங்களுக்கு பிரிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைக் கிரயங்களை உரிமம் அவற்றின் தனித்தனி கிரயங்களின் குறிப்பான இனங்காணலை பயன்படுத்தி அளவிடும்.

5.11 உரிமம் தொக்குகளின் கிரயங்களை முதல்-உள்-முதல்-வெளி (FIFO) அல்லது நிறை ஏற்றிய சராசரிக் கிரய முறையை பயன்படுத்தி அளவிடும். உரிமம் ஒத்த தன்மை மற்றும் உரிமத்திற்கு ஒத்த பயன்பாட்டைக் கொண்ட சகல தொக்குகளுக்கும் ஒரே முறையை பயன்படுத்தும். வேறுபட்ட தன்மை அல்லது பயன்பாட்டைக் கொண்ட தொக்குகளுக்கு வேறுபட்ட முறைகளை நியாயப்படுத்த முடியும். இறுதி-உள்-முதல்-வெளி (LIFO) முறை அனுமதிக்கப்படுவதில்லை.

**செலவாக ஏற்பிசைவு**

5.12 உரிமம் தொக்குகளை விற்பனை செய்யும்போது, அந்தத் தொக்குகளின் முன்கொணரற் தொகையை, தொடர்புபட்ட வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும் காலத்திலேயே ஒரு செலவாக (அனேகமாக விற்பனைக் கிரயம் என அழைக்கப்படும்) ஏற்பிசைவு செய்யும்.

5.13 சில சொத்துக்கள், உதாரணமாக சுயமாக நிருமாணிக்கப்படும் ஆதனம், பொறி மற்றும் உபகரண ஆக்கக்கூறாக பயன்படுத்தப்படும் தொக்குகள், வேறு சொத்துக் கணக்கிற்கு ஒதுக்கப்படலாம். இவ்வாறு வேறு சொத்திற்கு ஒதுக்கப்படும் தொக்குகள் பின்னர் அந்த வகைச் சொத்துக்கள் தொடர்புபட்ட நியமத்திற்கு அமைய கணக்கில் கொள்ளப்படும்.

**வெளிக்காட்டல்கள்**

5.14 உரிமம் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) தொக்குகளை அளவிடுவதில் பயன்படுத்திய முறை அடங்கலாக, கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள்;

(b) தொக்குகளின் மொத்த முன்கொணரற் தொகையும், உரிமத்திற்கு பொருத்தமான வகையில் வகைப்படுத்தல்களின் முன்கொணரற் தொகைகளும்;

(c) காலத்தின்போது செலவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட தொக்குகளின் தொகை;

(d) இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட அல்லது ஏற்பிசைவு விலக்கப்பட்ட சேதஇழப்பு நட்டங்கள்;

(e) பரிப்புக்களுக்கு காப்பீடாக வைக்கப்பட்ட தொக்குகளின் மொத்த முன்கொணரற் தொகை.

## அத்தியாயம் 6 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

### நோக்கெல்லை

6.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன கீழ்வருமாறு அமைந்துள்ள உருவச் சொத்துக்களாகும்:

(a) பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தியில் அல்லது வழங்கலில், பிறருக்கு வாடகைக்கு விடுதலில் அல்லது நிருவாகத் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு வைத்திருக்கப்படுபவை; அத்துடன்

(b) ஒன்றிற்கும் மேற்பட்ட அறிக்கையிடற் காலங்களின்போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுபவை.

### ஏற்பிசைவு(Recognition)

6.2 உதிரிப்பாகங்கள்,தயார்நிலை மாற்று உபகரணம் மற்றும் சீர்செய்தல் உபகரணம் போன்ற உருப்படிகளை ஒன்றிற்கு மேற்பட்ட காலங்களின்போது பயன்படுத்துவதற்கு உரிமம் எதிர்பார்த்தால் அல்லது அவை ஒரு குறிப்பிட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படி தொடர்பாக மாத்திரம் பயன்படுத்தக்கூடியதாக இருப்பின், அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணமாகும். ஏனைய சந்தர்ப்பங்களில் அவை தொக்காக வகைப்படுத்தப்படும்.

காணியும் கட்டடங்களும் வேறுபடுத்தக்கூடிய சொத்துக்கள் ஆதலினால், அவற்றை ஒன்றாக கொள்வனவு செய்கின்றபோதிலும், வெவ்வேறாக கணக்கிற் கொள்ளப்படும்.

### ஏற்பிசைவின்போது அளவீடு

6.3 உரிமம் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றை ஆரம்ப ஏற்பிசைவின் போது அதன் கிரயத்தில் அளவிடும்.

### கிரய மூலகங்கள்(Elements of cost)

6.4 ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியின் கிரயம் கீழ்வரும் எல்லாவற்றையும் அடக்கும்:

(a) சட்ட மற்றும் தரகுக் கட்டணம், இறக்குமதித் தீர்வை மற்றும் மீளளிக்கப்படாத கொள்வனவு வரிகள் உட்பட கொள்வனவு விலையிலிருந்து வியாபார கழிவுகள் மற்றும் தள்ளுபடிகளை கழிக்க வரும் தொகை;

(b) முகாமை எதிர்பார்த்தவாறு தொழிற்படுத்துவதற்கு ஏதுவாக அமைவிடத்திற்கும் அவசியமான தொழிற்படுநிலைக்கும் கொண்டுவருதலில் நேரடியாக ஒதுக்கப்படக்கூடிய எந்தவிதமான கிரயமும். இவை தலத்தை தயார்ப்படுத்துதல், ஆரம்ப விநியோகம் மற்றும் கையாள்கை, நிறுவுதல் மற்றும் பொருத்துதல்கள், மற்றும் தொழிற்படுகைச் சோதனை தொடர்புபட்ட கிரயங்களை உட்படுத்தலாம்.

6.5 கீழ்வரும் கிரயங்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியின் கிரயங்களல்ல. உரிமம் அவற்றை இறுக்கும்போதே செலவாக ஏற்பிசைவு செய்யும்:

(a) புதிய உற்பத்தி வசதியொன்றை திறந்துவைத்தற் கிரயம்;

(b) ஒரு புதிய பொருளை அல்லது சேவையை அறிமுகப்படுத்துவதில் ஏற்பட்ட கிரயம் (விளம்பர மற்றும் விற்பனை ஊக்குவிப்பு கிரயங்கள் அடங்கலாக);

(c) வியாபாரத்தை புதிய இடமொன்றில் அல்லது புதிய வகை வாடிக்கையாளருடன் நடத்துவது தொடர்பில் ஏற்படும் கிரயங்கள் (ஊழியர் பயிற்சிக் கிரயம் உட்பட);

(d) நிருவாக மற்றும் பிற பொதுவான மேந்தலைக் கிரயங்கள்;

(e) கடன்படுகைக் கிரயம்.

6.6 ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியின் நிருமாணம் அல்லது விருத்தியின் போதுஅது தொடர்புபட்ட தொழிற்பாட்டினால் ஏற்படும் வருமானம் மற்றும் செலவுகள், அந்தத் தொழிற்பாடுகள் உருப்படியை அந்த இடத்திற்கும் தொழிற்படு நிலைக்கும் கொண்டுவருவதற்கு அவசியமற்றதாயின், இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

### ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் அளவீடு

6.7 ஆதனம், பொறி மற்றும் உபகரண ஆரம்ப ஏற்பிசைவின் பின்னர் உரிமம் அவற்றை கிரயத்திலிருந்து திரள் தேய்மானம் மற்றும் திரள் சேதஇழப்பை (ஏதாவது இருப்பின்) கழிக்கவரும் தொகையில் அளவிடும்.

6.8 சாதாரண பயன்பாட்டினால் அல்லாது பாதிப்பிற்கு உள்ளாகும் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியின் கிரயத்திலிருந்து திரள் தேய்மானம் கழிக்கவரும் தொகையின் உரிய பங்கு (விகிதாசாரம்) இலாப நட்டத்தில் சேதஇழப்பாக ஏற்பிசைவு செய்யப்படும். ஆதனம், பொறி மற்றும் உருப்படியின் தினசரி சீர்ப்படுத்தற் கிரயம் அந்தக் கிரயம் இறுக்கப்படும் காலத்திலேயே இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**தேய்மானத்தகு தொகையும் (depreciable amount) தேய்மானக் காலமும்**

6.9 உரிமம் சொத்தொன்றின் தேய்மானத்தகு தொகையை அதன் பயன்தரும் ஆயுட்காலம் ஈறாக ஒரு ஒழுங்குமுறையில் ஒதுக்கும். தேய்மானத்தகு தொகை என்பது சொத்தின் கிரயத்திலிருந்து திரள் தேய்மானத்தையும் திரள் சேதஇழப்பு நட்டத்தையும் கழிக்க வரும் தொகையிலிருந்து ஈற்றுப் பெறுமதியை கழித்தலினால் பெறப்படும். சொத்தொன்றின் ஈற்றுப் பெறுமதியாவது, அந்தச் சொத்து அதன் ஆயுட்காலத்தை அடைந்து எதிர்பார்த்த நிலையில் உள்ளபோது அதை விற்பதனால் இப்போது கிடைக்கக்கூடிய தொகையில் இருந்து விற்பனை தொடர்பான மதிப்பிட்ட கிரயத்தை கழிக்கவரும் தொகையாகும்.

6.10 ஒவ்வொரு காலத்தின் தேய்மான அறவீடு இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

6.11 சொத்து பயன்படுத்தப்படும் முறையில் மாற்றம், கணிசமான அளவு எதிர்பார்க்கப்படாத சொத்துத் தேய்வு, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சந்தை விலைகளில் மாற்றங்கள் போன்ற காரணிகள் மிக அண்மைக்கால அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் சொத்தின் ஈற்றுப் பெறுமதியில் அல்லது பயன்தரும் ஆயுட்காலத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காட்டும். அத்தகைய காட்டிகள் இருப்பின், உரிமம் முன்னைய மதிப்பீடுகளை மீளாய்வு செய்து தற்போதைய எதிர்பார்ப்புக்கள் வேறுபடின் ஈற்றுப் பெறுமதி,தேய்மான முறை அல்லது பயன்தரும் ஆயுட்காலத்தினை திருத்தும். ஈற்றும் பெறுமதி, தேய்மான முறை அல்லது பயன்தரும் ஆயுட்காலத்தில் மாற்றங்களை உரிமம் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றமாக கணக்கிற் கொள்ளும்.

6.12 சொத்தின் தேய்மானம் அது பாவனைக்கு கிடைக்கும் தறுவாயில் அதாவது, முகாமை எதிர்பார்த்தவாறு தொழிற்படுத்துவதற்கு ஏதுவாக உரிய அமைவிடத்திலும் அவசியமான நிலையிலும் உள்ளபோது, ஆரம்பமாகும். அந்தச் சொத்து ஏற்பிசைவு விலக்கப்பட்டதும் அல்லது முற்றாக தேய்மானம் செய்யப்பட்டதும் தேய்மானம் முடிவுக்கு வரும்.

6.13 சொத்தின் பயன்தரும் ஆயுட்காலம் என்பது, உரிமத்தின் பயன்பாட்டிற்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் காலம் அல்லது அச்சொத்தின்மூலம் உரிமத்திற்கு கிடைக்குமென மதிப்பிட்ட உற்பத்தி அலகுகள் அல்லது அதனையொத்த அலகுகளின் எண்ணிக்கை ஆகும். சொத்தொன்றின் பயன்தரும் ஆயுட்காலத்தினை தீர்மானித்தலில் உரிமம் கீழே தரப்பட்டுள்ள எல்லாக் காரணிகளையும் கவனத்திற் கொள்ளும்:

(a) சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு. இது சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட இயல்வலு அல்லது பௌதிக உற்பத்தி தொடர்பாக மதிப்பிடப்படும்;

(b) எதிர்பார்க்கப்படும் சொத்தின் பௌதிக தேய்வு. இது சொத்து பயன்படுத்தப்பட உள்ள வேலைச் சுற்றுக்களின் (shifts) எண்ணிக்கை, திருத்த மற்றும் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சொத்து பாவனையில் இல்லாதபோது கவனம் செலுத்துதலும் பராமரிப்பும் போன்ற தொழிற்படுத்தற் காரணிகளில் தங்கியுள்ளது;

(c) உற்பத்தி முறையில் மாற்றங்கள் அல்லது மேம்படுத்தல்களினால் அல்லது சொத்தினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைக் கேள்வியில் மாற்றங்களினால் ஏற்படும் தொழில்நுட்ப அல்லது வர்த்தக வழக்கிழப்பு;

(d) சம்பந்தப்பட்ட சொத்து காலாவதியாகும் திகதி போன்ற சொத்துப் பயன்பாட்டின் சட்டரீதியான அல்லது அதனையொத்த வரையறைகள். கல்வளை (quarry), நிலத்தை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் இடம் போன்ற சில விதிவிலக்குகள் தவிர, காணி முடிவற்ற பயன்தரும் ஆயுட்காலத்தை கொண்டிருப்பதனால் அவை தேய்மானம் செய்யப்படுவதில்லை.

**தேய்மான முறை**

6.14 உரிமம் சொத்தின் எதிர்கால பொருளாதாரப் பயன்கள் நுகருவதற்கு எதிர்பார்க்கப்படும் பாங்கை பிரதிபலிக்கும் வகையிலமைந்த தேய்மான முறையை தெரிவுசெய்யும். சாத்தியமான தேய்மான முறைகள் நேர்கோட்டு முறை, குறைந்துசெல்லும் மீதி முறை, உற்பத்திசெய்த அலகுகளின் எண்ணிக்கை போன்ற பயன்படுத்தலின் அடிப்படையில் அமைந்த முறை ஆகியவற்றை உள்ளடக்கும்.

### ஏற்பிசைவு விலக்கல் (Derecognition)

6.15 கீழ்வரும் சந்தர்ப்பங்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றை உரிமம் ஏற்பிசைவு விலக்கல் செய்யும்:

(a) விற்பனையின்போது ; அல்லது

(b) சொத்தின் பயன்பாடு அல்லது விற்பனையிலிருந்து எதிர்கால பொருளாதாரப் பயன்கள் எதிர்பார்க்கமுடியாத போது.

6.16 உரிமம் ஆதனம், பொறி மற்றும் உருப்படியொன்றின் ஏற்பிசைவு விலக்கலினால் எழும் நயம் அல்லது இழப்பை ஏற்பிசைவு விலக்கப்படும்போது இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யும். உரிமம் அத்தகைய நயத்தை வருமானமாக வகைப்படுத்த மாட்டாது.

6.17 விற்பனைத் திகதியாவது சொத்தின் உரிமை தொடர்புபட்ட இடர் மற்றும் பயன்கள் மாற்றப்படுகின்ற திகதியாகும்.

6.18 ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் ஏற்பிசைவு விலக்கலின்போது ஏற்படும் நயம் அல்லது இழப்பு, விற்பனை மீதான வருமானத்திற்கும் (ஏதுமிருப்பின்) அந்த உருப்படியின் முன்கொணரற் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாகும்.

### வெளிக்காட்டல்கள்

6.19 உரிமம் ஆதனம், பொறி மற்றும் உபகரண ஒவ்வொரு வகுப்பிற்கும் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) மொத்த முன்கொணரற் தொகையை அறிதலில் பாவித்த அளவீட்டு அடிப்படை;

(b) பயன்படுத்திய தேய்மான முறைகள்;

(c) பயன்படுத்திய பயன்தரும் ஆயுட்காலம் அல்லது தேய்மான வீதம்;

(d) அறிக்கையிடற் காலத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் மொத்த முன்கொணரற் தொகை, திரள் தேய்மானம், திரண்ட சேதஇழப்பு நட்டங்கள் (ஏதுமிருப்பின்);

(e) கீழ்வருவனவற்றை வெவ்வேறாகக் காட்டும் வகையில் அறிக்கையிடற் கால ஆரம்பத்திலும் இறுதியிலும் முன்கொணரற் தொகைகளின் கணக்கிணக்கம்:

(i) சேர்ப்பனவுகள்;

(ii) விற்பனைகள் / அகற்றல்கள்;

(iii) தேய்மானம்;

(iv) சேதஇழப்பு.

இந்த கணக்கிணக்கத்தை முன்னைய காலங்களுக்கு காட்டவேண்டியதில்லை.

6.20 அத்துடன் உரிமம் தலைப்பு மட்டுப்படுத்திய அல்லது பரிப்புகளுக்கு காப்பீடாக வைத்த உருப்படிகளின் இருப்பு மற்றும் முன்கொணரற் தொகைகளை வெளிக்காட்டும்.

## அத்தியாயம் 7 – குத்தகைகள் *(Leases)*

### நோக்கெல்லை

7.1 குத்தகை என்பது குத்தகைக்கு தருனன் ஒரு கொடுப்பனவு அல்லது தொடர்ச்சியான கொடுப்பனவுகளுக்காக இணங்கப்பட்ட காலத்திற்கு சொத்தொன்றை பயன்படுத்தும் உரிமையை குத்தகைக்கு பெறுனனுக்கு அளிக்கும் உடன்படிக்கை ஆகும். குத்தகைக் கால முடிவில் சொத்துரிமையை குத்தகையானது குத்தகைக்கு பெறுனனுக்கு மாற்றவோ அல்லது மாற்றாதிருக்கவோ முடியும்.

7.2 இந்த அத்தியாயம் கீழ்வருவன தவிர்ந்த சகல குத்தகைக்களுக்கான கணக்கீட்டை அடக்குகிறது:

(a) கனிப்பொருட்கள், பெற்றோலியம், இயற்கை வாயு மற்றும் அவற்றையொத்த மீள்பிறப்பாக்க முடியாத வளங்களின் ஆராய்ச்சி அல்லது பயன்பாட்டிற்கான குத்தகை;

(b) திரைப்படங்கள், வீடியோப் பதிவுகள், காட்சிகள், கையெழுத்துப்பிரதிகள், ஆக்க உரிமை மற்றும் பதிப்புரிமை போன்றவற்றின் அனுமதிப்பத்திர உடன்படிக்கை;

(c) உயிரியற் சொத்துக்களுக்கான குத்தகை;

(d) கீழ்வருமாறு அமைந்த குத்தகை:

(i) சொத்துரிமை தொடர்பான கிட்டத்தட்ட சகல இடர் மற்றும் பயன்களை மாற்றுகின்ற குத்தகை; மற்றும்

(ii) குத்தகைக் காலம் சொத்தின் பயன்தரும் ஆயுட்காலத்தின் கணிசமான பகுதியை அடக்காத குத்தகை.

**குத்தகைக்கு பெறுனரின் (leasee) நிதிக்கூற்றுக்கள்**

7.3 குத்தகைக் கொடுப்பனவுகள் பணவீக்கத்தினால் எதிர்பார்க்கப்படும் கிரய அதிகரிப்பில் இருந்து குத்தகைக்குத் தருனருக்கு இழப்பீடு செய்வதற்கு ஏதுவாக கொடுப்பனவுகள் பொதுவான பணவீக்க அதிகரிப்பிற்கு அமைவாக கட்டமைக்கப்பட்டு இருந்தாலன்றி, குத்தகைக்குப் பெறுனர் குத்தகைக் கொடுப்பனவுகளை நேர்கோட்டு அடிப்படையில் செலவாக ஏற்பிசைவு செய்வர்.

**குத்தகைக்கு தருனரின் (leasor) நிதிக்கூற்றுக்கள்**

7.4 குத்தகைக்கு ஆளாகும் சொத்துக்களை குத்தகைக்கு தருனர் தமது சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் சொத்தின் தன்மைக்கு அமைய காட்டுவார்.

7.5 குத்தகைக் கொடுப்பனவுகள் பணவீக்கத்தினால் எதிர்பார்க்கப்படும் கிரய அதிகரிப்பில் இருந்து குத்தகைக்குத் தருனருக்கு இழப்பீடு செய்வதற்கு ஏதுவாக கொடுப்பனவுகள் பொதுவான பணவீக்க அதிகரிப்பிற்கு அமைவாக கட்டமைக்கப்பட்டு இருந்தாலன்றி, குத்தகைக்கு தருனர் குத்தகை வருமானத்தை குத்தகைக் காலமீறாக ஒரு நேர்கோட்டு அடிப்படையில் இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்வார்.

7.6 குத்தகை வருமானத்தை உழைத்தலில் இறுக்கப்பட்ட தேய்மானம் உட்பட்ட கிரயங்களை குத்தகைக்குத் தருனர் செலவாக ஏற்பிசைவு செய்வார்.

**வெளிக்காட்டல்கள்**

7.7 குத்தகைக்குப் பெறுனர் குத்தகை தொடர்பில் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டுவார்:

(a) செலவாக ஏற்பிசைவு செய்யப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள்;

(b) உதாரணமாக, உறுமுரிமை வாடகை பற்றிய தகவல், புதுப்பித்தல் அல்லது கொள்வனவுத் தேர்வுரிமைகள் மற்றும் விலை அதிகரிப்பு பற்றிய சரத்துக்கள், உப குத்தகைகள், குத்தகை ஏற்பாடுகளினால் விதிக்கப்பட்ட மட்டுப்படுத்தல்கள் உட்பட குத்தகைக்குப் பெறுனரின் கணிசமான குத்தகை ஏற்பாடுகள் பற்றிய பொதுவான விளக்கம்.

**அத்தியாயம் 8 – ஊழியர் பயன்கள்(Employee benefits)**

---

**பொதுவான ஏற்பிசைவுத் தத்துவம்**

8.1 ஊழியர் பயன்கள் எனப்படுவது பணிப்பாளர்கள் மற்றும் முகாமை உட்பட ஊழியர்கள் வழங்கிய சேவைக்கு பிரதியுபகாரமாக உரிமம் வழங்கும் பதிலிறுக்கி ஆகும். உரிமம், அதற்கு வழங்கிய சேவைகளின் விளைவாக ஊழியர்கள் உரித்தைப் பெறும் ஊழியர் பயன் கிரயங்களை இந்த அத்தியாயத்தில் கூறப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக ஏற்பிசைவு செய்யும்:

(a) நேரடியாக ஊழியர்களுக்கு செலுத்திய அல்லது ஊழியர் பயன் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்த தொகைகளை கழித்தபின் **ஒரு பரிப்பாகவும்,** அறிக்கையிடற் திகதிக்கு முன்னதாக செலுத்திய தொகை சேவையினால் ஏற்படும் கடப்பாட்டை அதிகரிப்பின், இந்த முற்கொடுப்பனவு எதிர்காலக் கொடுப்பனவை குறைக்கும் அல்லது காசு மீள்பெறுவனவு கிடைக்கும் அளவுக்கு உரிமம் அந்த மிகையை ஒரு சொத்தாகவும் ஏற்பிசைவு செய்யும்.

(b) இந்த நியமத்தின் வேறொரு அத்தியாயம் அந்தக் கிரயத்தினை தொக்குகள் அல்லது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பகுதியாக ஏற்பிசைவு செய்ய வேண்டுமென கேட்டிருந்தாலன்றி, ஒரு செலவாக.

**குறிப்பான (specific) ஊழியர் பயன்கள்**

8.2 ஊழியரொருவர் உரிமத்திற்கு சேவை வழங்கியிருப்பின், உரிமம் இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் தொகைகளை கீழ்வருமாறு அளவிடும்:

(a) கூலி, சம்பளம், சேமலாப நிதியம் அல்லது நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு, வைத்திய காப்புறுதிக் கட்டணம் மற்றும் வாகன அல்லது குடிமனைப் பயன்பாடு போன்ற சேவை வழங்கிய காலத்திற்கு முன்னர் அல்லது பின்னர் குறுகிய காலத்தில் செலுத்தப்படவேண்டிய பயன்களை சேவை வழங்கிய அறிக்கையிடற் காலத்தில்;

(b) உபகார மற்றும் இலாபப் பகிர்வுக் கொடுப்பனவுகளை சேவையை வழங்கிய அறிக்கையிடற் காலத்தில்;

(c) காப்புறுதியில் அடக்கப்படாத வைத்தியப் பயன்களை ஊழியர்கள் பயனைக் கோருகின்ற அறிக்கையிடற் காலத்தில்;

(d) அமைய, வருடாந்த அல்லது சுகவீன விடுமுறைகளின் நிமித்தம் இறுக்கப்பட்ட கிரயங்களை அந்த விடுமுறை பெறப்பட்ட அறிக்கையிடற் காலத்தில்.

8.3 தொழிலை முடிவுக்குக் கொண்டுவருதலில் செலுத்தவேண்டிய பணிக்கொடை போன்ற பயன்கள், ஊழியர் அறிக்கையிடற் கால முடிவில் தொழிலைவிட்டு நீங்கினால் அந்தத் திகதியில் செலுத்தியிருக்கவேண்டிய தொகையில் அளவிடப்பட்டு பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்படும். அறிக்கைக் கால முடிவில் தொழில் முடிவுக்கு கொண்டுவரற் பயனுக்கு உரித்துப் பெறுவதற்கு தேவையான குறைந்தபட்ச சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாத ஊழியர்கள் பரிப்பை அளவிடுவதில் கணக்கிற் கொள்ளப்பட மாட்டார்கள்.

8.4 வழமையான ஓய்வுபெறும் திகதிக்கு முன்னதாக ஊழியரின் சேவையை முடிவுக்குக் கொண்டுவரும் உரிமத்தின் தீர்மானத்தின் விளைவாக செலுத்தப்பட வேண்டிய பயன்கள் அந்தத் தீர்மானம் ஊழியருக்கு தெரிவிக்கப்படும் அறிக்கையிடற் காலத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

8.5 மிகை ஊழியர் காரணமாக சுயமாக ஓய்வுபெறுதற்கான பயன்களை ஊழியர் ஒருவர் ஏற்றுக்கொள்வதன் காரணமாக செலுத்தப்பட வேண்டிய பயன்கள், அந்த ஊழியர் ஓய்வு பெறுவதை ஏற்றுக்கொண்ட அறிக்கையிடற் காலத்தின் இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

## அத்தியாயம் 9 – வருமானம்(Revenue)

**நோக்கெல்லை**

9.1 வருமானம் என்பது குறித்த காலத்தின்போது உரிமத்தின் வழமையான செயற்பாட்டின் காரணமாக ஏற்படும் பொருளாதாரப் பயன்களின் மொத்த உட்பாய்வாக அமைவதுடன், அந்த உட்பாய்வுகள் உரிமையாண்மைப் பங்குபற்றுனரிடமிருந்து பெறும் பங்களிப்புக்கள் தவிர்ந்த வேறுவழியில் உரிமையாண்மையில் அதிகரிப்பை விளைவிப்பதாக இருத்தல் வேண்டும். இந்த அத்தியாயம் கீழ்வரும் ஊடுசெயல்கள் மற்றும் நிகழ்வுகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை கணக்கிற் கொள்வதில் பிரயோகிக்கப்படும்:

(a) பொருட்களின் விற்பனை (sale of goods) – விற்பனைக்காக உரிமத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது மீள்விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை ;

(b) சேவைகள் வழங்குதல்;

(c) உரிமம் ஒப்பந்தக்காரராகவுள்ள நிருமாண ஒப்பந்தம். நிருமாண ஒப்பந்தம் என்பது ஒரு சொத்தின் நிருமாணத்திற்காக அல்லது வடிவமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பாட்டில் அல்லது அவற்றின் இறுதிப் பயன்பாட்டில் இடைத்தொடர்புள்ள அல்லது ஒன்றிலொன்று தங்கியுள்ள சொத்துகளின் நிருமாணத்திற்காக குறிப்பாக இணங்கப்பட்ட ஒப்பந்தமாகும்;

(d) வட்டி உழைக்கின்ற வைப்புக்கள் அல்லது வருமதிகள்.

**வருமானத்தின் அளவீடு**

9.2 உரிமம் வருமானம் பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள பதிலிறுக்கியின் மதிப்பீட்டில் அளவிடும். பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள பதிலிறுக்கியின் மதிப்பீடானது உரிமம் அனுமதித்த வியாபாரக் கழிவுகள், உடனடித் தீர்ப்பனவுக்கான கழிவுகள், விற்பனை அளவுக்கான விடுதொகை ஆகியன ஏதுமிருப்பின் அவற்றை கழித்த பின்னரான தொகையாகும்.

9.3 உரிமம் வருமானத்தில் அதன் சொந்தக்கணக்கில் பெறப்பட்ட அல்லது பெறப்படவுள்ள மொத்த பொருளாதாரப் பயன்களின் உட்பாய்வை மாத்திரம் உட்படுத்தும். உரிமம் மூன்றாம் தரப்பினர் சார்பாக பெற்றுக்கொள்ளும் சகல தொகைகளையும் வருமானத்தில் விலக்கப்படும். விற்பனைகளின் அடிப்படையிலான வரிகள் அல்லது அரசாங்கம் சார்பாக சேகரிக்கப்படும் பெறுமதி சேர்வரிகள் வருமானத்தில் உட்படுத்தப்படுவதில்லை.

முகவராண்மையில், உரிமம் பணிசைத் தொகையை (தரகு) மாத்திரம் வருமானத்தில் உட்படுத்தும். முதல்வர் சார்பாக சேகரிக்கும் தொகை உரிமத்தின் வருமானம் அல்ல.

**பொருட்களின் விற்பனை(Sale of goods)**

9.4 கீழ்வரும் சகல நிபந்தனைகளும் நிறைவு செய்யப்படும்போதே பொருட்களின் விற்பனைமீதான வருமானத்தை உரிமம் ஏற்பிசைவு செய்யும்:

(a) பொருளின் சொத்துரிமை தொடர்பான கணிசமான இடர் மற்றும் பயன்பாட்டை உரிமம் வாங்குனருக்கு மாற்றியிருத்தல்;

(b) விற்கப்படும் பொருள்மீது சொத்துரிமையுடன் வழக்கமாக தொடர்புபட்ட அளவு தொடர்ச்சியான முகாமைத்துவ ஈடுபாட்டை அல்லது வலுவான கட்டுப்பாட்டை உரிமம் தொடர்ந்தும் தக்கவைத்திருக்காமை;

(c) வருமானத் தொகையை நம்பகமாக அளவிடக்கூடியதாக இருத்தல்;

(d) ஊடுசெயலுடன் தொடர்புபட்ட பொருளாதாரப் பயன்கள் உரிமத்திற்குப் பாய்வது அதிக சாத்தியமானதாக இருத்தல்;

(e) ஊடுசெயல் தொடர்பாக இறுக்கப்பட்ட அல்லது இறுக்கப்படவுள்ள கிரயங்களை நம்பகமாக அளவிடக்கூடியதாக இருத்தல்.

9.5 கணிசமான சொத்துரிமை இடர் மற்றும் பயன் எப்போது வாங்குனருக்கு மாற்றப்பட்டது என்பதை தீர்மானிக்க, ஊடுசெயலகளின் புறநிலைகளை பரீட்சித்தல் தேவைப்படும். அனேகமான சந்தர்ப்பங்களில் சொத்துரிமையின் இடர் மற்றும் பயன் மாற்றப்படுதல் பொருளின் சட்டரீதியான உரிமை அல்லது பொருள் வாங்குனருக்கு மாற்றப்படும் அதே நேரத்தில் நிகழும். இதே நிலைதான் சில்லறை வியாபாரத்தில் காணப்படும். உரிமம் கணிசமான சொத்துரிமை இடர் மற்றும் பயன்களை தொடர்ந்தும் தன்னகத்தே தக்க வைத்திருந்தால், உதாரணமாக குறிப்பிட்ட விற்பனையிலிருந்து வருமானத்தை பெறுதல் வாங்குனர் பொருளை விற்பனை செய்யும் உறுமுரிமையில் தங்கியிருந்தால், உரிமம் வருமானத்தை ஏற்பிசைவு செய்யாது.

**சேவைகள் வழங்குதல் (Rendering of Services)**

9.6 சேவை வழங்குதல் தொடர்புபட்ட ஊடுசெயலின் வெளிப்பாடு நம்பகமாக மதிப்பிடக் கூடியதாக இருப்பின், உரிமம் அறிக்கையிடற் கால இறுதியில் ஊடுசெயலின் பூர்த்தி மட்ட அடிப்படையில் ஊடுசெயலுடன் தொடர்புபட்ட வருமானத்தை ஏற்பிசைவு செய்யும். இது சிலவேளைகளில் பூர்த்திச் சதவீத முறை எனவும் அழைக்கப்படும். கீழ்வரும் சகல நிபந்தனைகளும் நிறைவுசெய்யப்படும் போது ஊடுசெயலின் வெளிப்பாடு நம்பகமாக மதிப்பிடக்கூடியதாக இருக்கும்:

(a) வருமானத் தொகை நம்பகமாக அளவிடக்கூடியதாக இருத்தல்;

(b) ஊடுசெயல் தொடர்புபட்ட பொருளாதாரப் பயன்கள் உரிமத்திற்கு உட்பாய்வது சாத்தியமானதாக இருத்தல்;

(c) அறிக்கையிடற் கால முடிவில் ஊடுசெயலின் “ பூர்த்தி மட்டம் நம்பகமாக அளவிடக்கூடியதாக இருத்தல்;

(d) அந்த ஊடுசெயலுக்கு அறிக்கையிடற் கால இறுதிவரை இறுக்கப்பட்ட கிரயங்கள் மற்றும் அதைப் பூர்த்தி செய்ய இறுக்கப்படவேண்டிய கிரயங்களை நம்பகமாக அளவிடக்கூடியதாக இருத்தல்.

9.7 சேவை வழங்குதல் தொடர்புபட்ட ஊடுசெயலின் வெளிப்பாடு நம்பகமாக மதிப்பிட முடியாததாக இருப்பின், உரிமம் ஏற்பிசைவு செய்த மீளப்பெறக்கூடிய செலவுகளின் அளவுக்கு மாத்திரம் வருமானத்தை ஏற்பிசைவு செய்யும்.

### நிருமாண ஒப்பந்தங்கள் (Construction contracts)

9.8 நிருமாண ஒப்பந்தமொன்றின் வெளிப்பாட்டை நம்பகமாக மதிப்பிடக்கூடியதாக உள்ள போது, அறிக்கையிடற் கால இறுதியில் ஒப்பந்தச் செயற்பாடுகளின் பூர்த்தி மட்டத்தின் அடிப்படையில் (சிலவேளைகளில் பூர்த்திச் சதவீத முறை எனவும் அழைக்கப்படும்) ஒப்பந்த நிருமாணம் தொடர்புபட்ட வருமானத்தையும் கிரயங்களையும் அந்தக் காலத்திற்கான வருமானமாகவும் செலவாகவும் ஏற்பிசைவு செய்யும். வெளிப்பாட்டின் நம்பகமான மதிப்பீடானது பூர்த்தி மட்டம் மற்றும் எதிர்காலக் கிரயங்களின் நம்பகமான மதிப்பீட்டை தேவைப்படுத்தும்.

### சதவீத பூர்த்தி முறை (Percentage completion method)

9.9 இந்த முறை சேவை வழங்குதல் மற்றும் நிருமாண ஒப்பந்தங்களிலிருந்து வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்குப் பயன்படும். சேவை ஊடுசெயல் அல்லது நிருமாண ஒப்பந்தம் தொடருகின்றபோது உரிமம் அதை மீளாய்வு செய்வதுடன், அவசியமான இடத்து வருமான மற்றும் கிரய மதிப்பீடுகளை திருத்தும்

9.10 உரிமமொன்று ஒரு ஊடுசெயலின் அல்லது நிருமாண ஒப்பந்தத்தின் பூர்த்தி மட்டத்தை, மேற்கொள்ளப்பட்ட வேலையை மிகவும் நம்பகமாக அளவிடும் முறையை பயன்படுத்தி தீர்மானிக்கும். சாத்தியமான முறைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) அதுவரை மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு இறுக்கப்பட்ட கிரயத்தை மதிப்பிட்ட மொத்தக் கிரயத்தின் விகிதமாக. அதுவரை மேற்கொள்ளப்பட்ட வேலைக்கு இறுக்கப்பட்ட கிரயங்கள், எதிர்கால செயற்பாட்டுடன் தொடர்புபட்ட பொருட் கிரயம் போன்ற கிரயங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளை உள்ளடக்கமாட்டா;

(b) மேற்கொள்ளப்பட்ட வேலையின் அளவு பற்றிய ஆய்வு;

(c) சேவை ஊடுசெயலின் அல்லது ஒப்பந்த வேலைகளின் பௌதிக பூர்த்தி விகிதம்.

அனேகமாக வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட முன்னேற்றக் கொடுப்பனவுகளும் முற்பணங்களும் மேற்கொள்ளப்பட்ட வேலையின் அளவை பிரதிபலிக்காது.

9.11 உரிமம் ஊடுசெயலின் அல்லது ஒப்பந்தத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்புபட்ட கிரயங்களை (பொருட்களின் அல்லது முற்கொடுப்பனவு போன்ற), அந்தக் கிரயங்கள் மீளப்பெறப்படுவது சாத்தியமெனில், சொத்தொன்றாக ஏற்பிசைவு செய்யும்.

9.12 மீளப்பெறுவது சாத்தியமற்ற எந்தவொரு கிரயத்தையும் உரிமம் உடனடியாக செலவாக ஏற்பிசைவு செய்யும்.

9.13 நிருமாண ஒப்பந்தமொன்றின் வெளிப்பாடு நம்பகரமாக மதிப்பிட முடியாதபோது,

(a) உரிமம் இறுக்கப்பட்ட ஒப்பந்தக் கிரயங்களில் மீளப்பெறுதல் சாத்தியமாகவுள்ள அளவுக்கு மாத்திரமே வருமானத்தை ஏற்பிசைவு செய்யும்; அத்துடன்

(b) உரிமம் ஒப்பந்தக் கிரயங்களை அவை இறுக்கப்படும் காலத்திலேயே செலவாக ஏறபிசைவு செய்யும்.

9.14 நிருமாண ஒப்பந்தத்தின் மொத்த ஒப்பந்தக் கிரயம் மொத்த ஒப்பந்த வருமானத்தைவிட அதிகரித்தல் சாத்தியமானதாக இருப்பின், எதிர்பார்க்கப்படும் நட்டமானது உடனடியாக செலவாக ஏற்பிசைவு செய்யப்படுவதுடன், பளுவேற்றிய (onerous)ஒப்பந்தத்திற்காக ஒத்த ஏற்பாடொன்று செய்யப்படும்.

9.15 ஏற்கனவே ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒப்பந்த வருமானத் தொகையொன்றின் சேகரிப்பு இனியும் சாத்தியமானதாக இல்லாவிடின், உரிமம் அந்த சேகரிக்கமுடியாத தொகையை ஒப்பந்த வருமான செம்மையாக்கமாக அல்லாது ஒரு செலவாக ஏற்பிசைவு செய்யும்.

### வட்டி (Interest)

9.16 வட்டியானது, விளைவு வட்டி வீதத்தை பாவித்து ஏற்பிசைவு செய்யப்படும்.

9.17 விளைவு வட்டி வீதம் என்பது, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்வுகளின் இற்றைப் பெறுமதியை சொத்தின் முன்கொணரற் தொகைக்கு சமப்படுத்தும் கழிவு வீதமாகும். விளைவு வட்டி வீதம் ஆரம்ப ஏற்பிசைவின்போதே தீர்மானிக்கப்படும். விளைவு வட்டிவீத முறையின் கீழ்–

(a) சொத்தின் முன்கொணரற் பெறுமதி, எதிர்கால காசுப் பெறுவனவுகளை விளைவு வட்டி வீதத்தில் கழிவீடு செய்வதனால் கிடைக்கும் இற்றைப் பெறுமதியாகும்;

(b) ஒரு குறிப்பிட்ட காலத்தில் வட்டி வருமானம், காலத்தின் ஆரம்பத்தில் சொத்தின் முன்கொணரற் தொகைமீது அந்தக் காலத்திற்கான விளைவு வட்டி வீதத்தினால் பெருக்குவதனால் பெறப்படும்.

9.18 வட்டியானது கிரமமாக ஒரே வட்டி வீதத்தில் பெறப்படுவதுடன், அந்த வட்டி பெறப்பட்ட சொத்துத் தொடர்பாக மிகைகள், கழிவுகள் அல்லது வேறு கிடைப்பனவுகள் அல்லது கொடுப்பனவுகள் சம்பந்தப்படாவிடின், காலத்தில் அந்தச் சொத்திலிருந்து பெறவேண்டிய வட்டி அந்தக் காலத்தில் அச்சொத்திலிருந்தான வட்டி வருமானமாகும்.

**வெளிக்காட்டல்கள்**

**வருமானம் பற்றிய பொதுவான வெளிக்காட்டல்கள்**

9.19 உரிமம் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) பொருத்தமான இடத்து ஊடுசெயலின் பூர்த்தி மட்டத்தை தீர்மானிப்பதற்கு கடைப்பிடித்த முறைகள் அடங்கலாக, வருமானத்தை ஏற்பிசைவு செய்வதற்கு கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள் ;அத்துடன்

(b) காலத்தின்போது ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒவ்வொரு வகையான வருமானத் தொகைகளை, குறைந்தபட்சம் கீழ்வருவனவற்றிலிருந்து கிடைத்த வருமானத் தொகைகளை வெவ்வேறாக காட்டுதல் வேண்டும்:

(i) பொருட்களின் விற்பனை;

(ii) சேவைகள் வழங்கல்;

(iii) வட்டி;

(iv) பணிசை (துரகு);

(v) வேறு ஏதும் கணிசமான வருமான வகைகள்.

**நிருமாண ஒப்பந்தங்களிலிருந்து வருமானம் தொடர்பான வெளிக்காட்டல்கள்**

9.20 உரிமம் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) காலத்தின்போது வருமானமாக ஏற்பிசைவு செய்த ஒப்பந்த வருமானத் தொகை;

(b) காலத்தின்போது ஏற்பிசைவு செய்யப்பட்ட ஒப்பந்த வருமானத்தை தீர்மானிக்க பயன்படுத்திய முறைகள்;

(c) நடைபெற்று வரும் ஒப்பந்தங்களின் பூர்த்தி மட்டத்தை அறிதலில் பயன்படுத்திய முறைகள்.

9.21 உரிமம் கீழ்வருவனவற்றை முன்னிலைப்படுத்தும்:

(a) ஒப்பந்த வேலை தொடர்பில் வாடிக்கையாளரிடமிருந்து வருமதியாகவுள்ள மொத்த தொகையை ஒரு சொத்தாக; அத்துடன்

(b) ஒப்பந்த வேலை தொடர்பில் வாடிக்கையாளருக்கு செலுத்தவேண்டிய மொத்தத் தொகையை ஒரு பரிப்பாக.

**அத்தியாயம் 10 – ஏற்பாடுகளும் உறுமுரிமைகளும்**

---

**நோக்கெல்லை**

10.1 இந்த அத்தியாயம் இந்த நியமத்தின் எஞ்சிய அத்தியாயங்களில் அடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் தவிர்ந்த, சகல ஏற்பாடுகள் (அதாவது, நிச்சயமற்ற காலம் மற்றும் தொகையை கொண்ட பரிப்புக்கள்), உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்படும். இவை கீழ்வருவன தொடர்புபட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கும்:

(a) குத்தகைகள்

(b) நிருமாண ஒப்பந்தங்கள்

(c) ஊழியர் பயன் கடப்பாடுகள்

(d) வருமான வரிகள்

**ஆரம்ப ஏற்பிசைவு (Initial Recognition)**

*10.2* உரிமம் ஒரு ஏற்பாட்டை கீழ்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஏற்பிசைவு செய்யும்:

(a) உரிமம் கடந்தகால நிகழ்வொன்றின் காரணமாக அறிக்கையிடற் திகதியில் ஒரு கடப்பாட்டை கொண்டிருத்தல்;

(b) தீர்ப்பனவுக்காக உரிமம் பொருளியற் பயன்களை மாற்றுமாறு கேட்கப்படுதல் அதிக சாத்தியமானதாக இருத்தல்; அத்துடன்

(c) கடப்பாட்டுத் தொகை நம்பகமாக அளவிடக்கூடியதாக இருத்தல்.

*10.3* உரிமம் ஏற்பாட்டை சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் ஒரு பரிப்பாக ஏற்பிசைவு செய்வதுடன், ஏற்பாட்டுத் தொகையை இந்த நியமத்தின் வேறு அத்தியாயம் அந்தத் தொகையை தொக்கு அல்லது ஆதனம், பொறி மற்றும் உபகரணம் போன்ற சொத்தின் கிரயத்தின் பகுதியாக ஏற்பிசைவு செய்ய வேண்டுமென கேட்டிருந்தாலன்றி, ஒரு செலவாக ஏற்பிசைவு செய்யும்.

**ஆரம்ப அளவீடு (Initial Measurement)**

*10.4* உரிமம் ஏற்பாட்டை அறிக்கையிடற் திகதியில் கடப்பாட்டை தீர்ப்பதற்கு தேவைப்படும் தொகையின் சிறந்த மதிப்பீட்டில் அளவிடும். சிறந்த மதிப்பீடு என்பது, அறிக்கையிடற் கால முடிவில் கடப்பாட்டை தீர்ப்பதற்கு அல்லது அதை அந்த நேரத்தில் மூன்றாம் தரப்பினருக்கு மாற்றுவதற்கு பகுப்பறிவின் அடிப்படையில் செலுத்தும் தொகையாகும்.

(a) ஏற்பாடானது உருப்படிகளின் பெரிய குடிலத்தை (population) கொண்டிருப்பின், தொகையின் மதிப்பீடு சாத்தியமான சகல வெளிப்பாடுகளினதும் தொடர்புடைய நிகழ்தகவுகளின் நிறையேற்றமாக இருக்கும். சாத்திய வெளிப்பாடுகளின் தொடர் வீச்சமொன்று காணப்பட்டு அதில் ஒவ்வொரு புள்ளியும் சமனான சாத்தியத்தை கொண்டிருப்பின், வீச்சத்தின் நடுப்புள்ளி பயன்படுத்தப்படும்.

(b) ஏற்பாடு தனியொரு கடப்பாட்டிலிருந்து ஏற்படும்போது, மிகவும் சாத்தியமான ஒரு தனியான வெளிப்பாடானது, அந்தக் கடப்பாட்டை தீர்ப்பதற்கு தேவைப்படும் தொகையின் சிறந்த மதிப்பீடாகும். எனினும், அத்தகைய சந்தர்ப்பத்திலுங்கூட, உரிமம் ஏனைய சாத்தியமான வெளிப்பாடுகளையும் கவனத்திற் கொள்ளும். ஏனைய சாத்தியமான வெளிப்பாடுகள் மிகவும் சாத்தியமான வெளிப்பாட்டை விடவும் மிகவும் அதிகமானதாகவோ அல்லது மிகவும் குறைவானதாகவோ இருப்பின், சிறந்த மதிப்பீடானது மிகவும் சாத்தியமான தனியான வெளிப்பாட்டை காட்டிலும் அதிகமானதாக அல்லது குறைவானதாக இருக்கும்.

**பின்னைய அளவீடு (Subsequent Measurement)**

*10.5* உரிமம் ஒரு ஏற்பாட்டிற்கு எதிராக அந்த ஏற்பாடு ஆரம்பத்தில் ஏற்பிசைவு செய்யப்பட்ட செலவினங்களை மாத்திரம் தாக்கல் செய்யும்.

*10.6* உரிமம் ஏற்பாடுகளை ஒவ்வொரு அறிக்கையிடற் திகதியிலும் மீளாய்வு செய்வதுடன், அறிக்கையிடற் திகதியில் கடப்பாட்டை தீர்ப்பதற்கு தேவைப்படும் தொகையின் நடப்பு சிறந்த மதிப்பீட்டை பிரதிபலிக்கும் வகையில் அவற்றை செம்மை செய்யும். முன்னர் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைக்கான எந்தவொரு செம்மையாக்கமும், அந்த ஏற்பாடு ஆரம்பத்தில் ஒரு சொத்தின் பகுதியாக ஏற்பிசைவு செய்யப்பட்டு இருந்தாலன்றி, இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

**உறுமுரிமைப் பரிப்புக்கள் (Contingent Liabilities)**

*10.7* உறுமுரிமைப் பரிப்பானது ஒரு சாத்தியமான ஆனால் நிச்சயமற்ற கடப்பாடு அல்லது, பந்தி 10.2 இல் நிபந்தனைகள் (b) அல்லது (c)அல்லது இரண்டையும் நிறைவு செய்யத் தவறியமை காரணமாக ஏற்பிசைவு செய்யப்படாத தற்காலக் கடப்பாடு ஆகும். உரிமம் உறுமுரிமைப் பரிப்பொன்றை பரிப்பாக ஏற்பிசைவு செய்யாது. உரிமம் ஒரு கடப்பாட்டிற்கு கூட்டாகவும் தனியாகவும் பரிப்பை கொண்டிருந்தால், ஏனைய தரப்பினரால் நிறைவு செய்யப்பட எதிர்பார்க்கப்படும் கடப்பாட்டின் பகுதி உறுமுரிமைப் பரிப்பாகக் கொள்ளப்படும்.

**உறுமுரிமைச் சொத்துக்கள் (Contingent Assets)**

*10.8* உறுமுரிமைச் சொத்து என்பது கடந்தகால நிகழ்வுகளிலிருந்து ஏற்படுவதும், அதன் இருப்பு முற்றிலுமாக உரிமத்தின் கட்டுப்பாட்டிற்குள் அமையாததும், ஒன்று அல்லது மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் ஏற்படுவதால் அல்லது ஏற்படாமையினால் உறுதி செய்யப்படுவதுமான சாத்தியமான ஒரு சொத்தாகும். உரிமம் உறுமுரிமைச் சொத்தினை ஒரு சொத்தாக ஏற்பிசைவு செய்யமாட்டாது. எதிர்கால பொருளாதாரப் பயன்கள் உரிமத்திற்கு பாய்வது கிட்டத்தட்ட நிச்சயமானதாக மாறும்போது, தொடர்புபட்ட சொத்து இனியும் ஒரு உறுமுரிமைச் சொத்தாக இல்லாததுடன், அது சொத்தாக ஏற்பிசைவு செய்யப்படுதல் பொருத்தமானதாகும்.

**வெளிக்காட்டல்கள்**

**ஏற்பாடுகள் பற்றிய வெளிக்காட்டல்கள்**

*10.9* ஒவ்வொரு ஏற்பாட்டு வகுப்பிற்கும் உரிமம் கீழ்வரும் எல்லாவற்றையும் வெளிக்காட்டும்:

(a) கீழ்வருவனவற்றைக் காட்டும் ஒரு கணக்கிணக்கம்:

(i) காலத்தின் ஆரம்பத்திலும் இறுதியிலும் முன்கொணரற் தொகைகள்;

(ii) காலத்தின்போது சேர்ப்பனவுகள்;

(iii) காலத்தின்போது ஏற்பாட்டிற்கு எதிராக தாக்கல்செய்த தொகைகள்;

(iv) காலத்தின்போது எதிர்ப்பதிவு செய்த பயன்படுத்தப்படாத தொகைகள்;

(b) கடப்பாட்டின் தன்மை பற்றிய சுருக்கமான விபரமும், அதனால் கொடுப்பனவுகள் ஏதும் ஏற்படின், எதிர்பார்க்கப்படும் தொகையும் காலமும்;

(c) அந்த வெளிப்பாய்வுகளின் தொகை மற்றும் காலத்தின் நிச்சயமற்ற தன்மை பற்றிய குறிப்பீடு;

(d) எதிர்பார்க்கப்படும் ஏதும் செலவு மீளளிப்புத் தொகையும், அந்த மீளளிப்பிற்காக ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள சொத்தின் தொகையும்.

முன்னைய காலங்களுக்கான ஒப்பீட்டுத் தகவல்கள் தேவையில்லை.

**உறுமுரிமைப் பரிப்புக்கள் பற்றிய வெளிக்காட்டல்கள்**

*10.10* தீர்ப்பனவிற்காக வளங்களின் வெளிப்பாய்வுக்கான சாத்தியம் மிகவும் குறைவாக இருப்பின், உரிமம் அறிக்கையிடற் திகதியிலுள்ள ஒவ்வொரு உறுமுரிமைப் பரிப்பு வகுப்பிற்கும் உறுமுரிமைப் பரிப்பின் தன்மை பற்றிய சுருக்கமான விபரத்தையும் நடைமுறைச் சாத்தியமானவிடத்து கீழ்வருவனவற்றையும் வெளிக்காட்டும்:

(a) அதன் நிதித்தாக்கத்தின் மதிப்பீடு;

(b) எந்தவொரு வெளிப்பாய்வின் காலம் மற்றும் தொகையின் நிச்சயமற்ற தன்மை பற்றிய குறிப்பீடு; மற்றும்

(c) செலவு மீளளிப்பிற்கான சாத்தியம், ஏதுமிருப்பின்.

இவ்வாறு செய்வதற்கு உரிமம் ஒவ்வொரு நியாயமான நடவடிக்கையை மேற்கொண்ட பின்னரும் உரிமம் மேற்கூறிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெளிக்காட்டல்களை தரமுடியாது போனால், அந்த உண்மை குறிப்பிடப்படும்.

**உறுமுரிமைச் சொத்துக்கள் பற்றிய வெளிக்காட்டல்கள்**

*10.11* பொருளியற் பயன்களின் வெளிப்பாய்வு சாத்தியமானதாக இருப்பினும் உண்மையில் நிச்சயமற்றதாக இருப்பின் (எனவே, ஏற்பிசைவு செய்யப்படாத), உரிமம் அறிக்கையிடற் கால இறுதியில் உறுமுரிமைச் சொத்தின் தன்மைபற்றி சுருக்கமான விபரத்தை வெளிக்காட்டுவதுடன், கணிசமான கிரயம் அல்லது முயற்சி இல்லாது நடைமுறைச் சாத்தியமெனில், அவற்றின் நிதித்தாக்கம் பற்றிய மதிப்பீட்டையும் வெளிக்காட்டும். இவ்வாறு செய்வதற்கு உரிமம் ஒவ்வொரு நியாயமான நடவடிக்கையை மேற்கொண்ட பின்னரும் உரிமம் இந்த வெளிக்காட்டலை தரமுடியாதுபோனால், அந்த உண்மை குறிப்பிடப்படும்.

## அத்தியாயம் 11 – கடன்படுகைக் கிரயம் (Borrowing cost)

**நோக்கெல்லை**

*11.1* இந்த அத்தியாயம் கடன்படுகைக் கிரயம் பற்றிய தேவைப்பாடுகளை குறிப்பிடுகின்றது. கடன்படுகைக் கிரயங்கள் என்பது, நிதிக் கடன்படுகை தொடர்பில் உரிமமொன்றிற்கு ஏற்படும் வட்டி மற்றும் பிற கிரயங்களாகும்.

**ஏற்பிசைவு**

11.2 உரிமம் சகல கடன்படுகைக் கிரயங்களையும் அவை இறுக்கப்படும் காலத்தில் இலாப நட்டத்தில் செலவாக ஏற்பிசைவு செய்யும்.

**வெளிக்காட்டல்**

11.3 உரிமம் அறிக்கையிடற் காலத்தில் ஏற்பிசைவு செய்த மொத்த வட்டிச் செலவை வெளிக்காட்டும்.

## அத்தியாயம் 12 – அந்நிய நாணய ஊடுசெயல்கள்

**நோக்கெல்லை**

12.1 இந்த அத்தியாயம் உரிமத்தின் நிதிக்கூற்றுக்களில் அந்நிய நாணய ஊடுசெயல்களை எவ்வாறு உட்படுத்துவது என்பதை குறிப்பிடுகின்றது.

**தொழிற்பாட்டு நாணயம்** (Functional Currency)

12.2 ஒவ்வொரு உரிமமும் அதன் தொழிற்பாட்டு நாணயத்தை இனங்காணும். உரிமத்தின் தொழிற்பாட்டு நாணயம் என்பது, உரிமம் தொழிற்படும் முதன்மைப் பொருளாதாரச் சூழலின் நாணயமாகும்.

**அந்நிய நாணய ஊடுசெயல்களை தொழிற்பாட்டு நாணயத்தில் அறிக்கையிடல்**

**ஆரம்ப ஏற்பிசைவு**

12.3 அந்நிய நாணய ஊடுசெயல் எனப்படுவது, உரிமம் கீழ்வருவனவற்றை மேற்கொள்ளும் போது ஏற்படும் ஊடுசெயல்கள் அடங்கலாக, அந்நிய நாணயமொன்றில் குறிப்பிடும் அல்லது அந்நிய நாணயத்தில் தீர்ப்பனவு தேவைப்படும் ஊடுசெயலாகும்:

(a) அந்நிய நாணயத்தில் விலை குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகளை வாங்கும்போது அல்லது விற்கும்போது;

(b) செலுத்தவேண்டிய அல்லது பெறவேண்டிய தொகை அந்நிய நாணயமொன்றில் குறிப்பிடப்பட்ட கடன்பெறுகை அல்லது கடன்வழங்கல்;

(c) அந்நிய நாணயத்தில் மேற்கொள்ளும் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனை அல்லது பரிப்புக்களை ஏற்றல் அல்லது தீர்த்தல்.

12.4 உரிமம் ஒரு அந்நிய நாணய ஊடுசெயலை ஆரம்ப ஏற்பிசைவின்போது அந்த அந்நிய நாணயத் தொகைக்கு, ஊடுசெயல் நிகழ்ந்தபோது தொழிற்பாட்டு நாணயத்திற்கும் அந்நிய நாணயத்திற்கும் இடையிலான தல நாணயமாற்று விகிதத்தை பிரயோகித்து தொழிற்பாட்டு நாணயத்தில் பதிவுசெய்யும்.

12.5 ஊடுசெயற் திகதியானது, ஊடுசெயல் இந்த நியமத்திற்கு அமைவாக ஏற்பிசைவிற்கு முதலாவதாக தகைமை பெறும் திகதியாகும். நடைமுறைக் காரணங்களுக்காக அந்த ஊடுசெயல் திகதியில் உண்மையான நாணயமாற்று விகிதத்திற்கு கிட்டத்தட்ட சமனான விகிதம் பயன்படுத்தப்படும். உதாரணமாக–

(a) ஒரு காலத்தில் நிகழுகின்ற அந்நிய நாணய ஊடுசெயல்கள் ஒவ்வொன்றிற்கும் வாரத்திற்கான அல்லது மாதத்திற்கான சராசரி விகிதம் பிரயோகிக்கப்படலாம் ; அல்லது

(b) தீர்ப்பனவு ஊடுசெயற் திகதியிலிருந்து குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டு இருந்தால், தொடர்புபட்ட வருமதி அல்லது சென்மதி தீர்க்கப்பட்ட விகிதத்தை பயன்படுத்தலாம்.

**தொடர்ந்துவரும் அறிக்கையிடற் கால இறுதியில் அறிக்கையிடல்**

12.6 ஒவ்வொரு அறிக்கையிடற் கால இறுதியிலும் உரிமம் –

(a) அந்நிய நாணயத்திலுள்ள நாணய உருப்படிகளை (monetary items) முடிவு விகிதத்தை பயன்படுத்தி நாணய மாற்றம் செய்யும்; அத்துடன்

(b) அந்நிய நாணயத்திலுள்ள நாணயம் சாரா உருப்படிகளை (non-monetary items) ஊடுசெயற் திகதியில் நிலவிய நாணயமாற்று விகிதத்தில் நாணயமாற்றம் செய்யும்.

12.7 உரிமம் நாணய உருப்படிகளை தீர்ப்பதனால் அல்லது அந்தக் காலத்தில் அல்லது முன்னைய காலத்தில் ஆரம்ப ஏற்பிசைவின்போது நாணயமாற்றம் செய்ய பிரயோகித்த விகிதத்திலிருந்து வேறுபட்ட விகிதத்தில் நாணய உருப்படிகளை நாணயமாற்றம் செய்வதனால் ஏற்படும் நாணயமாற்று வித்தியாசத்தை அவை ஏற்படும் காலத்தின் இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யும்.

**தொழிற்பாட்டு நாணயம் தவிர்ந்த முன்னிலைப்படுத்தல் நாணயத்தின் பிரயோகம்**

**முன்னிலைப்படுத்தல் நாணயத்திற்கு நாணயமாற்றம் செய்தல்**

12.8 உரிமம் நிதிக்கூற்றுக்களை எந்தவொரு நாணயத்திலும் (அல்லது நாணயங்களில் முன்னிலைப் படுத்தலாம்.முன்னிலைப்படுத்தும் நாணயம் உரிமத்தின் தொழிற்பாட்டு நாணயத்திலிருந்து வேறுபடின், உரிமம் அதன் வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை முன்னிலைப்படுத்தல் நாணயத்திற்கு நாணயமாற்றம் செய்யும்.

12.9 உரிமம் அதன் வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை வேறுபட்ட முன்னிலைப்படுத்தல் நாணயத்திற்கு கீழ்வரும் விதிமுறைகளை பயன்படுத்தி நாணய மாற்றம் செய்யும்:

(a) முன்னிலைப்படுத்தும் ஒவ்வொரு சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் கூற்றிலும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை அந்தக் கூற்றின் கால இறுதியில் நிலவும் விகிதத்தில் நாணயமாற்றம் செய்யும்;

(b) ஒவ்வொரு இலாப நட்ட மற்றும் கைக்கொள்இலாப கூற்றிலும் வருமான மற்றும் செலவு உருப்படிகளை ஊடுசெயல் நிகழ்ந்த திகதியில் நிலவிய நாணயமாற்று விகிதத்தில் நாணயமாற்றம் செய்யும்;

(c) இவற்றால் விளைகின்ற சகல நாணயமாற்று வித்தியாசங்களும் இலாப நட்ட மற்றும் கைக்கொள்இலாபக் கூற்றில் அறிக்கையிடற் கால இலாப நட்டத்தை கணிப்பதில் ஒரு உருப்படியாக அல்லாது, முன்கொண்டு செல்லும் கைக்கொள் இலாபத்தை கணிப்பதில் ஏற்பிசைவு செய்யப்படும்.

12.10 நடைமுறைக் காரணங்களுக்காக ஒரு உரிமம் வருமான, செலவின உருப்படிகளை நாணயமாற்றம் செய்வதற்கு ஊடுசெயல்கள் நிகழ்ந்த திகதிகளில் நிலவிய நாணய மாற்று விகிதங்களுக்கு கிட்டத்தட்ட சமனான ஒரு விகிதத்தை (உதா. காலத்திற்கான சராசரி விகிதம்) பயன்படுத்தலாம்.

**அத்தியாயம் 13 – உறவுமுறைத் தரப்பினர் வெளிக்காட்டல்கள்**

---

**நோக்கெல்லை**

13.1 உரிமமொன்று உறவுமுறைத் தரப்பினருடனான ஊடுசெயல் தொடர்பாக அவசியமான வெளிக்காட்டல்கள் மற்றும் அந்த தரப்பினருடன் நிலுவையில் உள்ள மீதிகளை அதன் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தவேண்டுமென இந்த அத்தியாயம் தேவைப்படுத்துகின்றது.

**உறவுமுறைத் தரப்பினரின் பொருள்வரையறை**

13.2 நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் உரிமத்துடன் (அறிக்கையிடும் உரிமம்) தொடர்புபட்ட ஒருவர் அல்லது ஒரு உரிமம் உறவுமுறைத் தரப்பினர் ஆகும்.

13.3 கீழ்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நபர் (அல்லது ஒரு உரிமம்) அல்லது அந்த நபரின் நெருங்கிய குடும்ப அங்கத்தினர் அறிக்கையிடும் உரிமத்தின் உறவுமுறைத் தரப்பினர் ஆவர்:

(a) அந்த நபர் (அல்லது உரிமம்) அறிக்கையிடும் உரிமத்தின்மீது கட்டுப்பாட்டை கொண்டிருந்தால்;

(b) அந்த நபர் (அல்லது உரிமம்) அறிக்கையிடும் உரிமத்தின்மீது இணைந்த கட்டுப்பாட்டை (joint control) அல்லது கணிசமான தலையிடற்தகவை அல்லது அதில் கணிசமான வாக்குரிமையை கொண்டிருந்தால்; அல்லது

(c) அந்த உரிமம் ஒரு உறவுமுறைத் தரப்பினரின் கட்டுப்பாடடிற்கு, இணைந்த கட்டுப்பாட்டிற்கு அல்லது கணிசமான தலையிடற்தகவிற்கு ஆளானால்.

**வெளிக்காட்டல்கள்**

**உப கம்பனி – மேன்னிலை கம்பனி தொடர்புகளின் வெளிக்காட்டல்**

13.4 உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல் உள்ளதா என்பதை அக்கறைப்படுத்தாது ஒரு உப கம்பனிக்கும் மேன்னிலைக் கம்பனிக்கும் இடையில் தொடர்புகள் வெளிக்காட்டப்படல் வேண்டும். உரிமம் மேன்னிலைக் கம்பனியின் பெயர் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்பினர் வேறுபடின்,இறுதிக் கட்டுப்படுத்தும் தரப்பினரை வெளியிடும். உரிமத்தின் மேன்னிலை கம்பனியோ அல்லது இறுதிக் கட்டுப்படுத்தும் தரப்பினரோ பொதுமக்களின் பாவனைக்கு நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தாத சந்தர்ப்பத்தில் அத்தகைய நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தும் அடுத்த அதிசிரேட்ட மேன்னிலைக் கம்பனி இருப்பின், அதனுடைய பெயர் வெளியிடப்படும்.

**உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களின் வெளிக்காட்டல்கள்**

13.5 உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல் என்பது, விலை அறவிடப்படுகின்றதா என்பதை கணக்கிற் கொள்ளாது, அறிக்கையிடும் உரிமத்திற்கும் உறவுமுறைத் தரப்பினருக்கும் இடையில் வளங்கள், சேவைகள் அல்லது கடப்பாடுகளின் மாற்றமாகும். உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களுக்கு உதாரணங்கள் கீழ்வருவனவற்றை உட்படுத்தும்:

(a) உரிமத்திற்கும் அதன் முதன்மை உரிமையாளருக்கும் இடையில் ஊடுசெயல்;

(b) உரிமமும் வேறொரு உரிமமும் ஒரு தனியான உரிமத்தின் அல்லது நபரின் பொதுக் கட்டுப்பாட்டுக்கு ஆளானால், அவ்விரு உரிமங்களுக்கு இடையிலான ஊடுசெயல்கள்;

(c) அறிக்கையிடும் உரிமத்தை கட்டுப்படுத்துகின்ற ஒரு உரிமம் அல்லது நபர், அறிக்கையிடும் உரிமத்தால் ஏற்றுக்கொள்ள வேண்டிய செலவுகளை இறுத்தல் தொடர்பான ஊடுசெயல்.

13.6 உரிமமொன்று உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை கொண்டிருப்பின், அது அந்த தரப்புடன் கொண்டுள்ள உறவுமுறையின் தன்மை பற்றியும், நிதிக்கூற்றுக்களில் உறவு முறையின் சாத்தியமான தாக்கம்பற்றி விளங்கிக்கொள்வதற்கு ஏதுவாக அவசியமான ஊடுசெயல்கள், நிலுவை மீதிகள் மற்றும் கடமைப்பாடுகள் பற்றிய தகவல்களையும் வெளிக்காட்டும். அத்தகைய ஊடுசெயல்கள் கொள்வனவுகள், விற்பனைகள் அல்லது பொருட்கள் அல்லது சேவை மாற்றல், குத்தகைகள், உத்தரவாதங்கள், உறவுமுறைத் தரப்பினர் சார்பில் உரிமத்தின் தீர்ப்பனவுகள் அல்லது உரிமம் சார்பில் உறவுமுறைத் தரப்பினரின் தீர்ப்பனவுகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

13.7 கீழ்வருவன வெளிக்காட்ட வேண்டிய உறவுமுறைத் தரப்பினருடனான ஊடுசெயல்களுக்கு உதாரணங்களாகும்:

(a) பொருட்களின் (முற்றுப்பெற்ற/முற்றுப்பெறாத) கொள்வனவு அல்லது விற்பனை;

(b) ஆதனம் மற்றும் ஏனைய சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனை;

(c) சேவைகளை வழங்குதல் அல்லது பெறுதல் (ஊழியர் அல்லது பணிப்பாளர் என்ற ரீதியில் உட்பட);

(d) குத்தகைகள்;

(e) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் மாற்றல்கள்;

(f) அனுமதிப்பத்திர உடன்படிக்கைகளின்கீழ் மாற்றல்கள்;

(g) நிதியளிப்பு ஏற்பாடுகளின்கீழ் மாற்றல்கள் (காசாகவோ, வேறுவழிகளிலோ கடன் மற்றும் உரிமையாண்மைப் பங்களிப்புக்கள் உட்பட);

(h) உத்தரவாதம் அல்லது பிணைகளை வழங்குதல்;

(i) உரிமம் சார்பாக பரிப்புகளைத் தீர்த்தல் அல்லது வேறு தரப்பினர் சார்பாக உரிமம் பரிப்புகளை தீர்த்தல் ;

(j) குழும உரிமங்களுக்கு இடையில் இடர்களை பகிரும் வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்தின்கீழ் மேன்னிலை உரிமத்தின் பங்குபற்றுதல்.

13.8 உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்கள், தொடர்புற்றோருடனான ஊடுசெயல்களில் காணப்படும் கட்டுறுப்புகளுக்கு இணையாக மேற்கொள்ளப்பட்டது என்பதை, அந்த உண்மையை வலுவளிக்கும் முறையில் ஒப்புவித்தாலன்றி, கூறமுடியாது.

*13.9* உரிம நிதிக்கூற்றுக்களின்மீது உறவுமுறைத் தரப்பினரின் ஊடுசெயல்களின் தாக்கத்தை விளங்கிக்கொள்ள வெவ்வேறான வெளிக்காட்டல்கள் அவசியமானவையாக இருந்தாற் தவிர, உரிமம் ஒத்த தன்மை கொண்ட உருப்படிகளை ஒன்றுகூட்டி வெளிக்காட்டலாம்.

## அத்தியாயம் 14 – அரச கொடைகள் (Government Grants)

### நோக்கெல்லை

*14.1* இந்த அத்தியாயம் அரச கொடைகள் தொடர்பான தேவைப்பாடுகளை குறிப்பிடுகின்றது. அரச கொடையானது, உரிமத்தின் தொழிற்படுத்தற் செயற்பாடுகள் தொடர்பில் குறித்த சில நிபந்தனைகளுக்கு இசைவாக கடந்த காலத்தில் அல்லது எதிர்காலத்தில் நடந்து கொள்வதற்கு பிரதியுபகாரமாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் வளங்களின் மாற்றல் வடிவிலமைந்த உதவியாகும்.

*14.2* நியாயமான பெறுமதியைக் கொண்டிராத மற்றும் உரிமத்தின் வழமையான வியாபார ஊடுசெயல்களிலிருந்து வேறுபடுத்தமுடியாத, அரசாங்கத்துடனான அரச உதவி வழங்கும் ஊடுசெயல்களை அரச கொடைகள் உட்படுத்துவதில்லை.

*14.3* உரிமமொன்றிற்கு அதன் வரிவிதி இலாப நட்டத்தை தீர்மானிப்பதில் கிடைக்கும் பயன்கள் அல்லது வருமானவரிப் பரிப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் அல்லது வரையறுக்கப்படும் பயன்களின் வடிவிலமைந்த அரச உதவிகளை இந்த அத்தியாயம் அடக்கவில்லை. அத்தகைய பயன்களுக்கு உதாரணங்கள்: ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வருமானவரி விலக்களிப்பு, முதலீட்டு வரிக்கழிவு, விரைவுபடுத்தப்பட்ட தேய்மானப் படிகள் மற்றும் குறைக்கப்பட்ட வருமானவரி வீதங்கள்.

### ஏற்பிசைவும் அளவீடும்

*14.4* உரிமம் அரச கொடைகளை கீழ்வருமாறு ஏற்பிசைவு செய்யும்:

(a) பெறுனர்மீது குறித்த சில எதிர்கால செயற்பாட்டு நிபந்தனைகள் விதிக்கப்படாத சந்தர்ப்பத்தில் கொடையானது, அது தொடர்பான பெறுவனவுகள் வருமதியாகும் போது வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

(b) பெறுனர்மீது குறித்த சில எதிர்கால செயற்பாட்டு நிபந்தனைகள் விதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கொடையானது, அந்தச் செயற்பாட்டு நிபந்தனைகள் நிறைவு செய்யப்படும்போது மாத்திரம் வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

(c) ஒரு குறித்த செலவுக்கு ஈடாக வழங்கப்படும் கொடை, அந்தச் செலவு இலாப நட்டத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் காலங்களில் வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

(d) சொத்தொன்றை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் கொடை, அந்தச் சொத்தின் பயன்தரும் ஆயுட்காலமீறாக ஒரு ஒழுங்குமுறையான அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும்.

(e) வருமான ஏற்பிசைவுத் தேர்வு நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட முன்னதாக பெறப்படும் கொடைகள், சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் ஒரு பிற்போடப்பட்ட வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

*14.5* உரிமம் பெற்றுக்கொண்ட அல்லது பெறவுள்ள சொத்தின் பெறுமதியில் கொடைகளை அளவிடும்.

### வெளிக்காட்டல்கள்

*14.6* உரிமம் அரச கொடைகள் தொடர்பில் கீழ்வருவனவற்றை வெளிக்காட்டும்:

(a) நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட அரச கொடைகளின் தன்மையும் தொகையும்;

(b) வருமானத்தில் ஏற்பிசைவு செய்யாத அரச கொடையுடன் இணைந்த, நிறைவு செய்யப்படாத நிபந்தனைகள் மற்றும் பிற உறுமுரிமைகள்;

(c) உரிமம் நேரடியாக பயனடைந்த வேறுவடிவிலமைந்த அரச கொடைகள் பற்றிய ஒரு குறிப்பீடு.

## அத்தியாயம் 15 – ஏனைய சொத்துக்களும் பரிப்புக்களும்

### வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்

15.1 உரிமம் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளை ஆரம்பத்தில் ஊடுசெயல் விலையில் ஏற்பிசைவு செய்து அளவிடும்.

15.2 அறிக்கையிடற்கால முடிவில் வருமதியான தொகைகளை அறவிடமுடியுமா என்பதை உரிமம் மீளாய்வு செய்து கவனத்திற் கொள்ளும்.

15.3 வருமதியாகவுள்ள தொகை (அல்லது அதன் பகுதி) அறவிட முடியாததாக இருந்து, அதை அறவிடுவதற்கு உரிமம் மேற்கொண்டு நடவடிக்கை எதையும் எடுப்பதில்லை எனத் தீர்மானித்தால், உரிமம் வருமதியாகவுள்ள தொகையை உரிய தொகையால் குறைத்து, அந்தத் தொகையை இலாப நட்டத்தில் அறவிடமுடியாத வருமதியாக ஏற்பிசைவு செய்யும்.

15.4 வருமதிகளாகக் காட்டப்படும் தொகைகள் எந்த அளவுக்கு அறவிடப்படக்கூடியவை என்பதை மதிப்பிடுவதற்காக உரிமம் அறிக்கையிடற் கால முடிவில் வருமதியாகவுள்ள தொகையை மீளாய்வு செய்யும். உரிமம் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும் வியாபார மற்றும் ஏனைய வருமதிகளை அவற்றின் அறவிடக்கூடிய தொகையில் அளவிடுவதுடன், ஏற்படும் வித்தியாசம் இலாப நட்டத்தில் வருமதிகளின் சேதஇழப்பிற்கான படியாக ஏற்பிசைவு செய்யும்.

### நிரற்படுத்திய கம்பனிகளில் பங்குகள்

15.5 பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் கொடுக்கல்வாங்கல் செய்யப்படும் பங்குகள் உரிய பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் கிரமமாக வெளியிடப்படுகின்றவாறு, அறிக்கையிடற் கால இறுதிக்கு முன்னர் கடைசி வியாபாரக் காலத்தில் வியாபார அளவு நிறையேற்றிய சராசரி விலையில்அளவிடப்படும்.

15.6 அறிக்கையிடற்கால முடிவில் ஒரு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் நிரற்படுத்திய பங்குகளின் கொடுக்கல் வாங்கல் இடைநிறுத்தப்பட்டால், உரிமம் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில், அந்தப் பங்குகளை அந்தத் திகதியில் அவற்றின் மிகவும் சாத்தியமான பெறுமதியில் அளவிடும்.

### ஏனைய கம்பனிகளில் பங்குகள்

15.7 பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் விலைகுறிப்பிடாத கம்பனிகளின் பங்குகள் கிரயம் அல்லது நிகர சொத்துப் பெறுமதி இரண்டிலும் குறைவான பெறுமதியில் அளவிடப்படும். பங்குகளின் நிகர சொத்துப் பெறுமதி உரிமத்தின் பொதுத்தேவை நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் கணித்தறியப்படும்.

### செலுத்தவேண்டிய கடன்கள்

15.8 உரிமம் செலுத்தவேண்டிய கடன்களை செலுத்தவேண்டிய தொகையில் அளவிடும்.

15.9 கடன் பெறப்படும்போது, ஒரு ஆண்டிற்குள் மீளச்செலுத்தவேண்டிய கடன் தொகை ஒரு ஆண்டிற்குப் பின்னர் செலுத்தவேண்டிய தொகையைவிட குறைவானதாக இருப்பின் கடன் நடைமுறையல்லாப் பரிப்பாக வகைப்படுத்தப்படும். பிற கடன்கள் நடைமுறைப் பரிப்பாக வகைப்படுத்தப்படும்.

15.10 அறிக்கையிடற்கால முடிவுவரை செலுத்தாது அட்டுறுவாகும் வட்டியானது, சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் ஒரு பரிப்பாக ஏற்பிசைவு செய்யப்படும்.

### வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்

15.11 உரிமம் வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளை ஆரம்பத்தில் ஊடுசெயல் விலையில் ஏற்பிசைவு செய்து அளவிடும்.

15.12 அறிக்கையிடற் காலமுடிவில் செலுத்தப்படவேண்டிய தொகையானது சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் ஒரு பரிப்பாக காட்டப்படும்.

### இலாப, நட்டம் மீதான வரி

15.13 உரிமம் அதன் அறிக்கையிடற் கால இறுதியில் அதன் இலாப, நட்டங்கள்மீது செலுத்த வேண்டிய வரித் தொகையை உரிய சட்டவாக்கங்களுக்கு அமைவாக கணிப்பிட்டு, ஒரு பரிப்பாக ஏற்பிசைவு செய்யும்.

**வெளிக்காட்டல்கள்**

*15.14* உரிமம் கீழ்வரும் உருப்படிகளை வெளிக்காட்டும்:

(a) அறவிடமுடியா வருமதிகளுக்காக இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்த தொகை;

(b) வருமதிகளின் சேதஇழப்பிற்காக இலாப, நட்டத்தில் ஏற்பிசைவு செய்த தொகை;

(c) அறிக்கையிடற் கால முடிவில் காலம்கடந்த (past due) வியாபார மற்றும் ஏனைய வருமதிகளின் காலப் பகுப்பாய்வு.

## அத்தியாயம் 16 – அறிக்கையிடற்கால முடிவின் பின்னரான நிகழ்வுகள்

**வரைவிலக்கணம்**

*16.1* அறிக்கையிடற் காலமுடிவின் பின்னரான நிகழ்வுகள், அறிக்கையிடற் கால முடிவுக்கும் நிதிக்கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்படும் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் நிகழ்வுகளாகும்.

**ஏற்பிசைவும் அளவீடும்**

**அறிக்கையிடற் காலத்தின் பின்னரான செம்மையாக்கல் நிகழ்வுகள்**

*16.2* உரிமம் அறிக்கையிடற் காலமுடிவுக்குப் பின்னர் ஏற்படும் செம்மையாக்கல் நிகழ்வுகளை பிரதிபலிக்கும் வகையில், தொடர்புபட்ட வெளிக்காட்டல்கள் உட்பட, நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட தொகைகளை செம்மையாக்கம் செய்யும் அல்லது முன்னர் ஏற்பிசைவு செய்யப்படாத உருப்படிகளை ஏற்பிசைவு செய்யும். அறிக்கையிடற் காலத்தின் முடிவுக்குப் பின்னரான செம்மையாக்கல் நிகழ்வு என்பது, அறிக்கையிடற் திகதி முடிவில் நிலவிய புறநிலைகளுக்கு சான்று வழங்கும் நிகழ்வாகும்.

*16.3* இதற்கான உதாரணங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) அறிக்கையிடற் கால முடிவில் சொத்தொன்று சேதஇழப்பு அடைந்தமை பற்றிய தகவல்களை அல்லது உதாரணமாக கீழ்வரும் காரணங்களுக்காக முன்னர் சொத்திற்காக ஏற்பிசைவு செய்த சேதஇழப்புத் தொகையை செம்மையாக்கம் செய்யவேண்டிய தகவல்களை அறிக்கையிடற் கால இறுதிக்குப் பின்னர் பெறுதல்:

(i) அறிக்கையிடற் கால முடிவின்பின்னர் ஒரு வாடிக்கையாளர் வங்குரோத்து நிலையை அடைதலானது, வழமையாக அறிக்கையிடற்கால இறுதியில் வியாபார வருமதிகளில் இழப்பு இருந்ததை உறுதிசெய்வதுடன், உரிமம் வியாபார வருமதிகளின் முன்கொணரற் தொகையை செம்மையாக்கம் செய்ய வேண்டும்;

(ii) அறிக்கையிடற் திகதிக்குப் பின்னர் தொக்குகளின் விற்பனைத் தொகை, அந்தத் திகதியில் மீளப்பெறக்கூடிய தொகையை மதிப்பிடும் தேவைக்கு அறிக்கையிடற் திகதியில் அவற்றின் விற்பனை விலைக்கான சான்றாக அமையும்.

(b) அறிக்கையிடற்கால முடிவுக்கு முன்னர் கொள்வனவுசெய்த சொத்தின் கிரயத்தை அல்லது சொத்தை விற்றதனால் கிடைக்கும் தொகையை அறிக்கையிடற் காலமுடிவுக்குப் பின்னர் தீர்மானித்தல்.

**அறிக்கையிடற் காலத்தின் பின்னரான செம்மையாக்கமற்ற நிகழ்வுகள்**

*16.4* உரிமம் அறிக்கையிடற் கால முடிவின்பின்னர் ஏற்படும் செம்மையாக்கமற்ற நிகழ்வுகளை பிரதிபலிப்பதற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்திருந்த தொகைகளை செம்மை செய்யாது. அறிக்கையிடற் காலத்தின் பின்னரான செம்மையாக்கமற்ற நிகழ்வுகள் என்பது அறிக்கையிடற் கால முடிவுக்குப் பின்னர் ஏற்பட்ட நிலையை காட்டும் நிகழ்வுகளாகும்.

*16.5* அறிக்கையிடற் காலமுடிவுக்குப் பின்னரான செம்மையாக்கமற்ற நிகழ்வுக்கு உதாரணம், அறிக்கையிடற் கால முடிவுக்குப் பின்னர் நிகழ்ந்த வெள்ளப்பெருக்கு அல்லது தீயினால் ஏற்பட்ட இழப்பாகும்.

**பங்கிலாபங்கள்**

16.6 உரிமம் அறிக்கையிடற் கால முடிவின் பின்னர் அதன் பங்குதாரர்களுக்கு பங்கிலாபம் பிரகடனம் செய்தால், அது அறிக்கையிடற் கால இறுதியில் அந்த பங்கிலாபங்களை ஒரு பரிப்பாக ஏற்பிசைவு செய்யாது.

**வெளிக்காட்டல்கள்**

**வழங்கலுக்கு அங்கீகரிக்கப்படும் திகதி**

16.7 நிதிக்கூற்றுக்களை வழங்குவதற்கு அங்கீகரித்த திகதி, அங்கீகாரத்தை வழங்கியோர் யார் என்பவற்றை உரிமம் வெளிக்காட்டும்.

## அத்தியாயம் 17 – சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறுதல்

**நோக்கெல்லை**

17.1 நிதி அறிக்கையிடலில் ஒரு உரிமத்தின் அடிப்படை முன்னர் SLFRS, SME களுக்கான SLFRS அல்லது வேறெந்த அடிப்படையாக இருந்தபோதிலும், இந்த அத்தியாயம் சிறிய உரிமங்களுக்கான SLFRS ஐ முதற் தடவையாக கடைப்பிடிப்பவர்களுக்கு பிரயோகிக்கப்படும்.

**முதற்தடவையாக கடைப்பிடித்தல்**

17.2 சிறிய உரிமங்களுக்கான SLFRS ஐ முதற் தடவையாக கடைப்பிடிக்கும் உரிமம் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு இசைவாக தயாரிக்கும் அதன் முதலாவது நிதிக் கூற்றுக்களில் இந்த அத்தியாயத்தின் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும்.

17.3 ஒரு உரிமத்தின் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு இசைவாக தயாரிக்கப்படும் முதலாவது நிதிக்கூற்றுக்கள் என்பது, அவை சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு இசைவாக தயாரிக்கப்பட்டன எனும் உரித்தின் வெளிப்படையான, நிபந்தனையற்ற ஒரு கூற்றை கொண்ட முதலாவது வருடாந்த நிதிக்கூற்றுக்கள் ஆகும். இந் நியமத்திற்குஅமைய தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் உரிமத்தின் அத்தகைய முதலாவது நிதிக்கூற்றுக்களாகக் கொள்ளப்படும்:

(a) உரிமம் முன்னைய காலங்களுக்கு நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தாமை;

(b) உரிமமானது அதன் மிக அண்மைக்கால முன்னைய நிதிக்கூற்றுக்களை சகல விடங்கள் தொடர்பாகவும் சிறிய உரிமங்களுக்கான SLFRS உடன் இணங்காத தத்துவங்களின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தி இருத்தல்; அல்லது

(c) உரிமம் அதன் மிக அண்மைக்கால முன்னைய நிதிக்கூற்றுக்களை SLFRS களுக்கான அல்லது SME களுக்கான SLFRS இற்கு இணங்க முன்னிலைப்படுத்தியிருத்தல்.

17.4 உரிமம் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறும் திகதியானது, உரிமம் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு இணங்க தயாரித்த முதலாவது நிதிக்கூற்றுக்களின் அறிக்கையிடற் கால ஆரம்பமாகும். உரிமம் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறிய திகதியில் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய தொழிற்பாட்டுக் கூற்றை தயாரிக்கும்.

**மாறற் திகதியில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான விதிமுறைகள்**

17.5 பின்னர் வரும் பந்திகளில் தரப்பட்டவை தவிர, உரிமம் அதன் ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் (சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறிய திகதியில்):

(a) சிறிய உரிமங்களுக்கான SLFRS இனால் ஏற்பிசைவை தேவைப்படுத்தப்பட்ட சகல சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களையும் ஏற்பிசைவு செய்யும்;

(b) சிறிய உரிமங்களுக்கான SLFRS ஏற்பிசைவை அனுமதிக்காத உருப்படிகளை சொத்துக்கள் அல்லது பரிப்புக்களாக ஏற்பிசைவு செய்யாது;

(c) அதன்முன்னைய நிதி அறிக்கையிடல் அடிப்படையின்கீழ் குறிப்பிட்ட சொத்து, பரிப்பு அல்லது உரிமையாண்மை வகையாக ஏற்பிசைவு செய்த ஒவ்வொரு உருப்படியையும், அவை சிறிய உரிமங்களுக்கான SLFRS இன்கீழ் வேறுபட்ட சொத்து, பரிப்பு அல்லது உரிமையாண்மை வகையை சார்ந்ததாக இருக்கும் பட்சத்தில், மீள்வகைப்படுத்தும் ; அத்துடன்

(d) ஏற்பிசைவுசெய்யப்பட்ட சகல சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களை அளவிடுதலில் சிறிய உரிமங்களுக்கான SLFRS ஐ பிரயோகிக்கும்.

*17.6* ஒரு உரிமம் சிறிய உரிமங்களுக்கான SLFRS இன் கீழ் தயாரிக்கும் அதன் ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்றில் (சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறிய திகதியில்) பயன்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள், முன்னைய நிதி அறிக்கையிடல் அடிப்படையின்கீழ் பயன்படுத்தியவற்றிலிருந்து மாறுபடக்கூடும். இதன் விளைவான செம்மையாக்கம் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறிய திகதிக்கு முந்திய ஊடுசெயல்கள், பிற நிகழ்வுகள் அல்லது புறநிலைகளிலிருந்து ஏற்படுகின்றன. எனவே, உரிமம் அந்தச் செம்மையாக்கங்களை ,சிறிய உரிமங்களுக்கான SLFRS க்கு மாறிய திகதி கைக்கொள் இலாபத்தில் (அல்லது பொருத்தமான வேறு உரிமையாண்மை வகையில்) ஏற்பிசைவு செய்யும்.

*17.7* மிக அண்மைக் கால முந்திய நிதிக்கூற்றுக்களை SLFR களுக்கானஅல்லது SME களுக்கான SLFRS இற்கு இணங்க முன்னிலைப்படுத்திய உரிமமொன்று நிதிக்கூற்றுக்களை SLFRS களுக்கான அல்லது SME களுக்கான SLFRS இற்கு இணங்க முன்னிலைப்படுத்தலில் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியை, இந்த நியமத்திற்கு அமைவாக நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தலில், அத்தகைய மீள்மதிப்பீட்டுத் திகதியில் அந்த உருப்படியின் முன்கொணரற் தொகையாக பயன்படுத்த முடிவுசெய்யலாம்.

**ஒப்பீட்டுத் தகவல்களின் முன்னிலைப்படுத்தல்**

*17.8* உரிமம் இந்த நியமத்திற்கு அமைவாக தயாரித்த அதன் ஆரம்ப சொத்துக்கள் மற்றும் பரிப்புகள் பற்றிய கூற்றை (சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறிய திகதியில்) சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு அமைவான அதன் முதலாவது நிதிக்கூற்றுகளில் ஒப்பீட்டுத் தகவல்களாக முன்னிலைப்படுத்தும்.

*17.9* உரிமமானது, சிறிய உரிமங்களுக்கான SLFRS ஐ பயன்படுத்தி தயாரித்த அதன் முதலாவது நிதிக்கூற்றுக்களின் இலாப, நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் கூற்றில், முந்திய நிதிக்காலம் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்களை அந்தக் காலத்திற்கு உரிமம் முன்னிலைப்படுத்திய பொதுத்தேவை நிதிக்கூற்றுக்களின் ஏற்பிசைவு மற்றும் அளவீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தலாம். அத்துடன், அந்த உண்மையை குறிப்புக்களில் வெளிக்காட்டும்.

**வெளிக்காட்டல்கள்**

***சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறியமை பற்றிய விபரிப்பு***

*17.10* முன்னைய நிதி அறிக்கை அடிப்படையிலிருந்து சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறியமை, அதன் அறிக்கையிடப்பட்ட உரிமையாண்மை மற்றும் நிதிச் சாதனையை எவ்வாறு பாதித்தது என்பதை உரிமம் விபரிக்கும்.

**இணக்கக் கூற்றுக்கள்**

*17.11* முன்னைய பந்தியுடன் ஒத்திசைவதற்காக, சிறிய உரிமங்களுக்கான SLFRS ஐ பயன்படுத்தி தயாரிக்கும் உரிமத்தின் முதலாவது நிதிக்கூற்றுக்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) ஒவ்வொரு கணக்கீட்டுக் கொள்கை மாற்றத்தினதும் தன்மை பற்றிய விளக்கம் ;

(b) முன்னர் பாவித்த நிதி அறிக்கையிடல் அடிப்படைக்கு அமைவாக கணித்தறிந்த உரிமையாண்மைக்கும் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு மாறிய திகதியில் சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு அமைய பெற்ற உரிமையாண்மைக்கும் இடையிலான கணக்கிணக்கம்.

*17.12* உரிமம் முந்திய காலங்களுக்கு பொதுத்தேவை நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தி இருக்காவிடில், அது சிறிய உரிமங்களுக்கான SLFRS இற்கு அமைய தயாரித்த அதன் முதலாவது நிதிக் கூற்றுக்களில் அந்த உண்மையை வெளிக்காட்டும்.

**நடைமுறைக்கு வரும் திகதி**

*17.13* சிறிய உரிமங்களுக்கான SLFRS, 2016 ஜனவரி 1 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் காலங்களை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வரும். முந்திய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு உரிமம் இந்த நியமத்தை 2016 ஜனவரி 1 ஆந் திகதிக்கு முன்னர் ஆரம்பமாகும் காலத்திற்கு பிரயோகித்தால், அது அந்த உண்மையை வெளிக்காட்டும்.

**நிதிக்கூற்றுக்களின் விளக்க முன்னிலைப்படுத்தல்கள்**

*சிறிய உரிமங்களுக்கான SLFRS உடன் இணைந்துவரும் இந்த விளக்க முன்னிலைப்படுத்தல் இந்த நியமத்தின் பகுதியல்ல.*

**< உரிமத்தின் பெயர் >**
**20X2 மார்ச் 31 ஆந் திகதியில் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் பற்றிய கூற்று**

| | | | | |
|---|---|---|---|---|
| *மார்ச் 31 இல்* | | **20X2** | | **20X1** |
| | | ரூபா | | ரூபா |
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | | X | | X |
| விலைகுறிப்பிடாத கம்பனிகளில் பங்குகள் | | X | | X |
| வங்கி வைப்புக்கள் - நீண்ட கால | | X | | X |
| | | X | | X |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| தொக்குகள் | | X | | X |
| விலைகுறித்த கம்பனிகளில் பங்குகள் | X | | X | |
| உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து வருமதிகள் | X | | X | |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | X | | X | |
| காசும் காசுச் சமானங்களும் | | | | X |
| | | X | X | X |
| **மொத்தச் சொத்துக்கள்** | X | X | | |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | | | |
| **உரிமையாண்மை** | | | | |
| குறிப்பிடு மூலதனம் | | X | | X |
| கைக்கொள் இலாபம் | | X | | X |
| | | X | | X |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள்** | | | | |
| வங்கிக் கடன்கள் - நீண்ட கால | | X | | X |
| கடன்கள் - நீண்ட கால | X | | X | |
| நீண்டகால ஊழியர் பயன் கடப்பாடுகள் | X | | X | |
| | | X | | X |
| **நடைமுறைப் பரிப்புக்கள்** | | | | |
| வங்கிக் கடன்கள் - குறுகிய கால | | X | | X |
| செலுத்தவேண்டிய வரி | X | | X | |
| உறவுமுறைத் தரப்பினருக்கு சென்மதி | X | | X | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | X | | X | |
| | | X | | X |
| **மொத்தப் பரிப்புக்கள்** | | X | | X |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | X | | X |

**<உரிமத்தின் பெயர்>**
**20X2 மார்ச் 31ந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான**
**இலாப, நட்ட மற்றும் கைக்கொள் இலாபக் கூற்று**

| ஆண்டு முடிவு: மார்ச் 31 | | **20X2** | | **20X1** |
|---|---|---|---|---|
| | | **ரூபா** | | **ரூபா** |
| **வருமானம்** | | X | | X |
| விற்பனைக் கிரயம் | | X | | X |
| மொத்த இலாபம் | | X | | X |
| ஏனைய வருமானம் | | X | | X |
| வினியோகக் கிரயங்கள் | X | | X | |
| நிருவாகச் செலவுகள் | | X | | X |
| ஏனைய செலவுகள் | | X | | X |
| நிதிக் கிரயங்கள் | | X | | X |
| வரிக்குமுன் இலாபம் | | X | | X |
| வருமான வரி | | X | | X |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **X** | | **X** |
| | | | | |
| **கைக்கொள் வருமானம்:** | | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் கைக்கொள் இலாபம் | X | | X | |
| முன்னைய கால வழுக்களின் திருத்தம் | X | | X | |
| முன்னைய காலங்கள் தொடர்புபட்ட கணக்கீட்டுக் கொள்கையில் மாற்றங்களின் தாக்கங்கள் | | X | | X |
| ஆண்டின் ஆரம்பத்தில் செம்மையாக்கிய கைக்கொள் இலாபம் | X | | X | |
| ஆண்டிற்கான இலாபம் | X | | X | |
| பங்கிலாபங்கள் | X | | X | |
| ஆண்டின் இறுதியில் கைக்கொள் இலாபம் | | X | | X |

**<உரிமத்தின் பெயர்>**
**20X2 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்வுக் கூற்று**

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வுகள்** | | | | |
| வரிக்குமுன் இலாபம் | | X | | |
| செம்மையாக்கங்கள்: | | | | |
| தேய்மானம் | | X | | |
| முதலீட்டு வருமானம் | | (X) | | |
| வட்டிச் செலவு | | X | | |
| | | X | | |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகளில் அதிகரிப்பு | (X) | | | |
| தொக்குகளில் வீழ்ச்சி | | X | | |
| வியாபாரச் சென்மதிகளில் வீழ்ச்சி | (X) | | | |
| தொழிற்பாடுகளிலிருந்து பிறப்பிக்கப்பட்ட காசு | | X | | |
| செலுத்திய வட்டி | (X) | | | |
| செலுத்திய வருமான வரி | (X) | | | |
| *தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப்பாய்வு* | | X | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்வுகள்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவு | | | (X) | |
| உபகரண விற்பனையிலிருந்து பெற்ற தொகை | | | X | |
| பெற்ற வட்டி | | | X | |
| பெற்ற பங்கிலாபங்கள் | | | X | |
| *முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்திய நிகரக் காசு* | | | (X) | |
| **நிதி அளிப்புச் செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்வுகள்** | | | | |
| மூலதனப் பங்குகளை வழங்கியதிலிருந்து பெற்ற தொகை | | X | | |
| நீண்டகால கடன்களிலிருந்து பெற்ற தொகை | | | | X |
| செலுத்திய பங்கிலாபம் | | | (X) | |
| *நிதியளிப்பு செயற்பாடுகளில் பயன்படுத்தியநிகரக் காசுப்பாய்வு* | | | (X) | |
| **காசு மற்றும் காசுச் சமானங்களில் நிகர அதிகரிப்பு** | X | | | |
| **காலத்தின் ஆரம்பத்தில் காசும் காசுச் சமானங்களும்** | | X | | |
| **காலத்தின் இறுதியில் காசும் காசுச் சமானங்களும்** | | X | | |

## SLFRS களுடன் ஒப்பீடு

*சிறிய உரிமங்களுக்கான SLFRS உடன் இணைந்துவரும் இந்த SLFRS களுடனான ஒப்பீடு இந்த நியமத்தின் பகுதியல்ல.*

| SLFRS தொடர்பு | SLFRS தலைப்பு | சிறிய உரிமங்களுக்கான SLFRS தேவைப்பாடு |
|---|---|---|
| SLFRS 1 | இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் (SLFRS) முதற் தடவையான கடைப்பிடிப்பு | எளிதாக்கப்பட்டுள்ளது |
| SLFRS 2 | பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 3 | வியாபார இணைப்புக்கள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 4 | காப்புறுதி ஒப்பந்தங்கள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 5 | விற்பனைக்காக வைத்திருக்கும் நடைமுறையல்லாச் சொத்துக்களும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகளும் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 6 | கனிப்பொருள் வளங்களின் ஆராய்ச்சியும் மதிப்பாய்வும் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 7 | நிதிச் சாதனங்கள்: வெளிக்காட்டல்கள் | திருத்தப்பட்டுள்ளது |
| SLFRS 8 | தொழிற்பாட்டுப் பிரிவுகள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 9 | நிதிச் சாதனங்கள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 10 | ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 11 | இணைந்த ஏற்பாடுகள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 12 | பிற உரிமங்களில் நாட்டங்களின் வெளிக்காட்டல்கள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 13 | சீர்மதிப்பு அளவீடு | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 14 | ஒழுங்குபடுத்தற் பிற்போடல் கணக்குகள் | உட்படுத்தப்படவில்லை |
| SLFRS 15 | வாடிக்கையாளருடன் ஒப்பந்தங்களிலிருந்து வருமானம் | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 1 | நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 2 | தொக்குகள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 7 | காசுப்பாய்வுக் கூற்று | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 8 | கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 10 | அறிக்கையிடற் காலத்திற்குப் பிந்திய நிகழ்வுகள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 11 | நிருமாண ஒப்பந்தங்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 12 | வருமான வரிகள் | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 16 | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 17 | குத்தகைகள் | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 18 | வருமானம் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 19 | ஊழியர் பயன்கள் | திருத்தப்பட்டுள்ளது |

| SLFRS தொடர்பு | SLFRS தலைப்பு | சிறிய உரிமங்களுக்கான SLFRS தேவைப்பாடு |
|---|---|---|
| LKAS 20 | அரச கொடைகளுக்கான கணக்கீடும், அரச உதவிகளின் வெளிக்காட்டலும் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 21 | அந்நிய நாணயமாற்று விகிதங்களில் மாற்றங்களின் தாக்கங்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 23 | கடன்படுகைக் கிரயங்கள் | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 24 | உறவுமுறைத் தரப்பினர்பற்றிய வெளிக்காட்டல்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 26 | ஓய்வுபெற்ற பயன் திட்டங்களின் அடிப்படையில் கணக்கீடும் வெளிக்காட்டல்களும் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 27 | ஒன்றித்த மற்றும் வேறான நிதிக்கூற்றுக்கள் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 28 | கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 29 | மிகைப் பணவீக்க பொருளாதாரங்களில் நிதி அறிக்கையிடல் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 31 | கூட்டுத் தொழில்முயற்சிகளில் நாட்டங்கள் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 32 | நிதிச் சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல் | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 33 | பங்கொன்றிற்கான வருவாய் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 34 | இடைக்கால நிதி அறிக்கையிடல் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 36 | சொத்துக்களின் சேத இழப்பு | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 37 | ஏற்பாடுகள், உறுமுரிமைப் பரிப்புக்கள் மற்றும் உறுமுரிமைச் சொத்துக்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| LKAS 38 | அருவச் சொத்துக்கள் | உட்படுத்தப்படவில்லை |
| LKAS 39 | நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் அளவீடும் | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 40 | முதலீட்டு ஆதனம் | திருத்தப்பட்டுள்ளது |
| LKAS 41 | விவசாயம் | உட்படுத்தப்படவில்லை |

**எளிதாக்கப்பட்டது** என்பதன் கருத்து, நியமத்திற்கு அடிப்படையாக அமைந்த தத்துவங்களில் கணிசமான திருத்தங்கள் இல்லாது, தேவைப்பாடுகள் எளிமையாக்கப்பட்டு உள்ளமையாகும்.

**திருத்தப்பட்டுள்ளது** என்பதன் கருத்து, சிறிய உரிமங்களுக்கு சிக்கற்றன்மையை குறைத்து, கிரய விளைவுத்திறனை மேம்படுத்துவதற்காக தேவைப்பாடுகள் கணிசமாக திருத்தப்பட்டுள்ளன என்பதாகும்.

**உட்படுத்தப்படவில்லை** என்பதன் கருத்து, நியமத்தின் தேவைப்பாடுகள் உட்படுத்தப்படவில்லை என்பதாகும்.

## SME களுக்கான SLFRS களுடன் ஒப்பீடு

| SME களுக்கான SLFRS இன் அத்தியாயம் | அத்தியாயத் தலைப்பு | சிறிய உரிமங்களுக்கான SLFRS இல் தேவைப்பாடு |
|---|---|---|
| 1 | சிறிய மற்றும் நடுத்தர அளவு உரிமங்கள் | உட்படுத்தப்படவில்லை |
| 2 | கோட்பாடுகளும் தொடர்தேடல் தத்துவங்களும் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 3 | நிதிக்கூற்று முன்னிலைப்படுத்தல் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 4 | நிதிநிலைக் கூற்று | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 5 | முற்றடக்க வருமானக் கூற்றும் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 6 | உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்றும், வருமானம் மற்றும் கைக்கொள் இலாபக் கூற்றும் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 7 | காசுப்பாய்வுக் கூற்று | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 8 | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 9 | ஒன்றித்த மற்றும் வேறான நிதிக்கூற்றுக்கள் | உட்படுத்தப்படவில்லை |
| 10 | கணக்கீட்டுக் கொள்கைகள், மதிப்பீடுகள் மற்றும் வழுக்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 11 | அடிப்படை (எளிமையான) நிதிச் சாதனங்கள் | திருத்தப்பட்டுள்ளது |
| 12 | ஏனைய நிதிச் சாதனங்கள் தொடர்புபட்ட விடயங்கள் | திருத்தப்பட்டுள்ளது |
| 13 | தொக்குகள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 14 | கூட்டுக் கம்பனிகளில் முதலீடுகள் | உட்படுத்தப்படவில்லை |
| 15 | கூட்டுத் தொழில்முயற்சிகளில் முதலீடுகள் | உட்படுத்தப்படவில்லை |
| 16 | முதலீட்டு ஆதனங்கள் | திருத்தப்பட்டுள்ளது |
| 17 | ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 18 | நன்மதிப்பு தவிர்ந்த அருவச் சொத்துக்கள் | உட்படுத்தப்படவில்லை |
| 19 | வியாபார இணைப்புக்களும் நன்மதிப்பும் | உட்படுத்தப்படவில்லை |
| 20 | குத்தகைகள் | திருத்தப்பட்டுள்ளது |
| 21 | ஏற்பாடுகளும் உறுமுரிமைகளும் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 22 | பரிப்புக்களும் உரிமையாண்மையும் | திருத்தப்பட்டுள்ளது |
| 23 | வருமானம் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 24 | அரச கொடைகள் | ஏளிதாக்கப்பட்டுள்ளது |
| 25 | கடன்படுகைக் கிரயங்கள் | திருத்தப்பட்டுள்ளது |
| 26 | பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு | உட்படுத்தப்படவில்லை |
| 27 | சொத்துக்களின் சேதஇழப்பு | திருத்தப்பட்டுள்ளது |
| 28 | ஊழியர் பயன்கள் | திருத்தப்பட்டுள்ளது |
| 29 | வருமான வரி | திருத்தப்பட்டுள்ளது |
| 30 | அந்நிய நாணயமாற்றங்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |

| SME களுக்கான SLFRS இன் அத்தியாயம் | அத்தியாயத் தலைப்பு | சிறிய உரிமங்களுக்கான SLFRS இல் தேவைப்பாடு |
|---|---|---|
| 31 | மிகைப் பணவீக்கம் | உட்படுத்தப்படவில்லை |
| 32 | அறிக்கையிடற் காலமுடிவுக்குப் பிந்திய நிகழ்வுகள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 33 | உறவுமுறைத் தரப்பினர் வெளிக்காட்டல்கள் | எளிதாக்கப்பட்டுள்ளது |
| 34 | விசேடத்துவம் பெற்ற செயற்பாடுகள் | உட்படுத்தப்படவில்லை |
| 35 | SME களுக்கான SLFRS க்கு மாறுதல் | திருத்தப்பட்டுள்ளது |

**எளிதாக்கப்பட்டது** என்பதன் கருத்து, நியமத்திற்கு அடிப்படையாக அமைந்த தத்துவங்களில் கணிசமான திருத்தங்கள் இல்லாது, தேவைப்பாடுகள் எளிமையாக்கப்பட்டு உள்ளமையாகும்.

**திருத்தப்பட்டுள்ளது** என்பதன் கருத்து, சிறிய உரிமங்களுக்கு சிக்கற்றன்மையை குறைத்து, கிரய விளைவுத்திறனை மேம்படுத்துவதற்காக தேவைப்பாடுகள் கணிசமாக திருத்தப்பட்டுள்ளன என்பதாகும்.

**உட்படுத்தப்படவில்லை** என்பதன் கருத்து, நியமத்தின் தேவைப்பாடுகள் உட்படுத்தப்படவில்லை என்பதாகும்.